வெளியீடு—௩[illegible]

# இளைஞர் தமிழ் இலக்கணம்

க, உ, ௩-ஆம் பாரங்களுக்குரியது.

நான்குநேரிப் போர்டு ஹைஸ்கூல்
தலைமைத் தமிழாசிரியர்
இ. மு. சுப்பிரமணிய பிள்ளை
இயற்றியது.

**Approved by the Text-Book Committee**
*for class use, vide Consolidated List page 192,*
*Fort St. George Gazette, dated 10—5—38.*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA
WORKS PUBLISHING SOCIETY,
TINNEVELLY, LTD.,
TINNEVELLY 1938 & MADRAS.

COPYRIGHT PRICE As. 8

கழக வெளியீடு—கடுஎ

இளைஞர்

# தமிழ் இலக்கணம்

க, உ, ௩-ஆம்
பாரங்களுக் குரியது.

நான்குநேரிப் போர்டு ஹைஸ்கூல்
தலைமைத் தமிழாசிரியர்
திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளை யவர்கள்
இயற்றியது.

**Approved by the Madras Text-Book Committee.**
*For Class use, vide Consolidated List Gazette p. 192 Dated 10-5-38.*

:: திருநெல்வேலித் தென்னிந்திய ::
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி & சென்னை
வெகுதானிய - ஆனி

*Fifth Edition—June 1938*

7/271

*Published by*
THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
:: PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., ::
TINNEVELLY & MADRAS.
June 1938

[*Copy right*]

**The Jupiter Press, Madras.**

# முன்னுரை

ஒரு மொழியைப் பிழையறப் பேசுவதற்கும் எழுது வதற்கும் சிறந்த கருவியா யிருப்பது அம் மொழிக்கென அறிஞரா லியற்றப்பட்ட இலக்கண நூலே.

இத்தகைய இலக்கணநூற் பயிற்சியின் பயனைச் சிறுவர் சிறுமியர் இளமையிலேயே அடையப் பெறுவது சிலையி லெழுத்தாகு மன்றோ! ஆகையின் இவ் இளைஞர் தமிழ் இலக்கணம் என்னும் நூல் சிறுவர்க் கென்றே ஆராய்ந்து எழுதப்பட்டுள்ளது. வினாவிடை முறையிலே இலக்கண பாடத்தைப் பிள்ளைகட்குக் கற்பித்தல் சிறப்பன்றென நம் அரசினர் கல்விக் கழகத்தினர் கருதுவதாலே அதை விடுத்து இலக்கண விதிகளையும், குறியீட்டுச் சொற்களையும் பிள்ளை களின் அறிவுக்கேற்ப அவை அவர்கள் மனத்தில் எளிதிற் பதியுமாறு இலேசான புதியதொரு முறையில் விளக்கி அமைத்துள்ளேன். இம்முறை எத்தரத்து மாணவர்க்கும் தமிழ் இலக்கணங் கற்பதில் பேரவாவினையும் சோர்வற்ற ஊக்கத்தையும் அளிக்கும் என்பதில் ஐயமின்று.

இந்நூல் யான் நான்காம் ஐந்தாம் வகுப்புகட் (Classes) கென்று எழுதி வெளிப்படுத்தியிருக்கும் இலக்கணச் சிறு நூலின் தொடர்ச்சியாகும். இது முதலாம் இரண்டாம் மூன்றும் பாரங்கட்குப் (Forms) பாடப் புத்தகமாக இப் போது வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றது. முதற்புத்தகத் திற் சுருங்கச் சொல்லி விளங்கவைத்த இலக்கணப் பொருள் களுடன் இதன்கண் அவ்வப் பாரத்துக்குத் தக்கபடி ஆங் காங்கு வேண்டியவற்றைச் சேர்த்தும், முன் சுருக்கிச்

சொன்னவற்றை இதன்கண் விரித்துச் சொல்லியும், சுருக்க விரிவுமுறை (Concentric Method) யில் எழுதி யிருக்கின்றேன்.

இத் தமிழ்நாட்டின்கண் சிற்றிலக்கண நூல்கள் பல மாணவரிடமும் உலவிவருவனவால் அம் மாணவர்க்கென்றே யான் எழுதியிருக்கும் இவ் இலக்கண நூல்கள் மிகையாகுமென நினைக்கலாம். அறிஞர்கள் இவற்றை ஒருமுறை உள் நுழைந்து உற்றுநோக்கிப் பார்ப்பார்களாயின் அவர்கள் கொள்ளும் அவ் ஐயுறவுக்கு அணுவளவும் இடமிரா தென்பது தானே போதரும்.

ஆகையின் இச் சிற்றிலக்கண நூல்களை அவ்வப் பாரங்கட்குப் பாடப் புத்தகங்களாக வைத்து ஆசிரியர்களும் அதிகாரிகளும் எனக்கு உதவிபுரிந்து என்னை ஊக்குவிக்குமாறு அவர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இ. மு. சுப்பிரமணியன்.

# பொருளடக்கம்

Tam
II F.L
Tiruva
C.H.S

## முதல் பாரம் (First Form)

| இலக்கணப் பொருள் | | பக்கம் |
|---|---|---|
| இலக்கணப் பிரிவுகள் | ... | 9 |
| க. எழுத்திலக்கணம் | ... | 9 |
| க. உயிர் எழுத்துக்கள் | ... | 10 |
| உ. மெய் எழுத்துக்கள் | ... | 13 |
| ௩. உயிர்மெய் எழுத்துக்கள் | ... | 14 |
| ச. ஆய்த எழுத்து | ... | 15 |
| உ. சொல்லிலக்கணம் | ... | 17 |
| க. பெயர்ச்சொல் | ... | ,, |
| க. திணை | ... | 18 |
| உ. பால் | ... | 19 |
| ௩. எண் | ... | 20 |
| ச. இடம் | ... | 21 |
| ரு. வேற்றுமை | ... | 23 |
| உ. வினைச்சொல் | ... | 25 |
| க. தெரிநிலைவினை | ... | 26 |
| உ. குறிப்புவினை | ... | ,, |
| ௩. வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் | ... | ,, |
| ச. காலம் | ... | 27 |
| ௩. இடைச்சொல் | ... | 28 |
| ச. உரிச்சொல் | ... | 29 |
| ௩. சொற்றொடர் இலக்கணம் | ... | ,, |
| க. அடைமொழி | ... | 30 |
| உ. நிறுத்தல் அடையாளம் | ... | ,, |
| ச. சந்தி இலக்கணம் | ... | 31 |
| க. மெய்யும் உயிரும் சேர்வது | ... | ,, |
| உ. உடம்படுமெய் | ... | 32 |

தமிழ்ப் பல்கலைக்கழக நூலகம்
23 MAR 19??

# இரண்டாம் பாரம் (Second Form)

| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| க. எழுத்திலக்கணம் | | 34 |
| க. உயிரும் மெய்யும் | ... | ,, |
| உ. எழுத்தின் உருவம் | ... | 35 |
| ௩. மாத்திரை | ... | ,, |
| ச. வினு வெழுத்து | ... | 36 |
| ரு. இன வெழுத்து | ... | 37 |
| சு. தம் அளவிற் குறுகி ஒலிக்கும் எழுத்துக்கள் | ... | 39 |
| எ. குற்றியலுகரம் | ... | 40 |
| அ. முற்றியலுகரம் | ... | 42 |
| கூ. குற்றியலிகரம் | ... | 43 |
| உ. சொல்லிலக்கணம் | ... | ,, |
| க. பெயர்ச்சொல்—பிரிவுகள் | ... | ,, |
| க. திணையால் வருபெயர் | ... | 44 |
| உ. பாலால் வருபெயர் | ... | 45 |
| ௩. எண்ணால் வருபெயர் | ... | ,, |
| ச. இடத்தால் வருபெயர் | ... | 46 |
| ரு. சுட்டுப் பெயர் | ... | ,, |
| சு. வினுப் பெயர் | ... | 47 |
| எ. அளவைப் பெயர் | ... | ,, |
| அ. முறைப் பெயர் | ... | 48 |
| வேற்றுமை | ... | ,, |
| உ. வினைச்சொல் | ... | 56 |
| க. பயனிலை | ... | 57 |
| உ. எழுவாய், செயப்படுபொருள் | ... | ,, |
| ௩. தோன்றா எழுவாய் | ... | ,, |
| ச. காலம் காட்டும் இடைநிலைகள் | ... | 58 |
| ரு. தெரிநிலை வினை, குறிப்பு வினை | ... | 59 |
| சு. வினைமுற்று | ... | 60 |
| எ. பெயரெச்சம் | ... | 63 |
| அ. வினையெச்சம் | ... | 64 |
| கூ. தெரிநிலை வினை | ... | 65 |
| ௰. குறிப்பு வினை | ... | 66 |

ங. இடைச்சொல் ... 67
ச. உரிச்சொல் ... 69

ங. சொற்றொடர் இலக்கணம் ... 70

ச. சந்தி இலக்கணம் ... 72
க. குற்றியலுகரப் புணர்ச்சி ... 73
உ. உயிரீற்றின்முன் வல்லினம் ... 74
ங. ணகரமும், னகரமும் ... ,,
ச. மகர ஈறு ... ,,


## மூன்றும் பாரம் (Third Form)


க. எழுத்திலக்கணம் ... 76
க. அகச்சுட்டு, புறச்சுட்டு ... ,,
உ. அகவினு, புறவினு ... ,,
ங. ஐகாரக் குறுக்கமும், ஔகாரக் குறுக்கமும் ... 77
ச. ஆய்தக் குறுக்கம் ... 78
ரு. மகரக் குறுக்கம் ... ,,
சு. அளபெடை ... ,,
எ. உயிரளபெடை ... 79
அ. ஒற்றளபெடை ... ,,
கூ. மொழிமுதல் எழுத்துக்கள் ... ,,
ய. மொழிக்கு முதலில் வராத எழுத்துக்கள் ... 80
கக. மொழி ஈற்று எழுத்துக்கள் ... ,,
கஉ. மொழி ஈற்றில் வாராதன ... ,,
கங. போலி எழுத்துக்கள் ... ,,

உ. சொல்லிலக்கணம் ... 82
க. பெயர்ச்சொல் ... ,,
க. தொழிற்பெயர் வினையாலணையும் பெயர் ... ,,
உ. இடுகுறி, காரணம், காரண இடுகுறி ... 85
ங. ஆகுபெயர் ... 86
ச. வழக்கு ... 90
ரு. ஆண்பால், பெண்பால் ... 91
சு. ஒருமை, பன்மை ... 93
எ. மரியாதைப் பன்மை ... 94

அ. உருபு மயக்கம் ... 95
கூ. விளியடையாப் பெயர்கள் ... 96
ய. உருபு ஏற்கும்போது திரியும் பெயர்கள் ... 97
உ. வினைச்சொல் ... 98
க. வினைமுற்றின் பிரிவுகள் ... ,,
உ. செய்வினை, செயப்பாட்டுவினை ... 99
ங. உடன்பாடு, எதிர்மறை ... 100
ச. ஏவல், வியங்கோள் ... 101
ரு. தன்வினை, பிறவினை ... 102
சா. முற்றெச்சம் ... 103
ங. இடைச்சொல் ... ,,
ச. உரிச்சொல் ... 106
ங. சொற்றொடர் இலக்கணம் ... 107
க. தொகை நிலைத்தொடர் ... ,,
உ. தொகா நிலைத்தொடர் ... 109
ச. சந்தி இலக்கணம் ... 110
க. எகரவினாவும் முச்சுட்டும் ... ,,
உ. பூ என்ற சொல் ... ,,
ங. தனிக்குறிலொடு கூடிய மெய் ... 111
ச. லகர ளகர ஈறு ... ,,
ரு. வருமொழி முதலில் தகர நகரங்கள் 113
சா. வேற்றுமை யுருபுகள் ... ,,
இலக்கண அட்டவணை ... 115

# இளைஞர் தமிழ் இலக்கணம்

## முதல் பாரம் (First Form)

---

## தமிழ் இலக்கணம்

1. இலக்கணம் என்பது அமைப்பு:—தமிழ் மொழியின் அமைப்பே தமிழ் இலக்கணமாம்.

2. தமிழ் மொழியின் அமைப்பைப் பற்றிக் கூறும் நூலே தமிழ் இலக்கண நூலாம். அதை நாம் படித்தால் தமிழ் மொழியைப் பிழையில்லாமற் பேசவும் எழுதவும் அறிந்து கொள்ளலாம்.

3. தமிழ் இலக்கணத்தின் பிரிவுகள்:—தமிழ் இலக்கணத்தை (1) எழுத்து இலக்கணம், (2) சொல் இலக்கணம், (3) சொற்றொடர் இலக்கணம், (4) சந்தி இலக்கணம் என நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

---

## க. எழுத்திலக்கணம்

4. எழுத்து.—சொல்லுக்கு முதற் காரணமாகிய ஒலியே எழுத்தாம். உதாரணமாக மரம் என்ற சொல்லை எடுத்துப் பார்ப்போம். இச் சொல் உண்டாவதற்கு முதற் காரணமாக மூன்று ஒலிகள் இருக்கின்றன; அவையாவன: முதலாவதாக "ம" என்ற ஒலி, இரண்டாவதாக "ர" என்ற ஒலி, மூன்றாவதாக "ம்" என்ற ஒலி. இவ் ஒலிகள் ஒவ்

வொன்றும் தனித்தனியே ஒவ்வோர் எழுத்தாம். ம, ர, ம், என்ற மூன்று எழுத்துக்களும் சேர்ந்து மரம் என்ற சொல்லாகின்றன.

5. தமிழ் மொழியிலுள்ள எழுத்துக்கள்:—தமிழ் மொழியிலுள்ள எழுத்துக்கள் நான்கு வகைப்படும். அவை (1) உயிர் எழுத்து, (2) மெய் எழுத்து, (3) உயிர்மெய் எழுத்து, (4) ஆய்த எழுத்து என்பன.

## க. உயிர் எழுத்துக்கள்

6. உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டு. அவை அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்பன.

### குறிலும் நெடிலும்

7. ஒலி வேறுபாட்டால் இவற்றை இரண்டு வகையாகப் பிரிக்கலாம், இவற்றில் சில குறுகி ஒலிக்கின்றன; சில நீண்டு ஒலிக்கின்றன.

அ, இ, உ, எ, ஒ என்ற ஐந்து எழுத்துக்கள் குறுகி ஒலிக்கின்றன. குறுகி ஒலிப்பன குற்றெழுத்துக்கள் என்று பெயர் பெறும். அவை குறில் என்றும் சொல்லப்படும்.

நன்னூல் சூத்திரம்—"அ, இ, உ, எ, ஒ குறில் ஐந்தே." (க)

8. ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ ஆகிய ஏழு எழுத்துக்கள் நீண்டு ஒலிக்கின்றன. நீண்டு ஒலிப்பன. நெட்டெழுத்துக்கள் என்று பெயர் பெறும். அவை நெடில் என்றும் சொல்லப்படும்.

ந. சூ.—ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ நெடில்" (உ)

### பயிற்சி க.

பின் வருகின்ற சொற்றொடர்களில் உள்ள உயிர் எழுத்துக்களை எடுத்துக் குறில், நெடில் எனப் பகுத்தெழுதுக:—

1. அவன் அறம் செய்ய ஆசைப்பட்டான்.
2. ஔவையார் இரக்கம் உடையவர்.
3. இந்தப் பானை ஓட்டையாக இருப்பதால் ஒழுகுகின்றது.
4. அவன் தன் ஊருக்குப்போய் ஈட்டியை எடுத்து வந்தான்.
5. ஐயரே! உமக்கு இஃது எது?
6. ஏழைகளுக்கு உணவு இல்லை என்று சொல்லாதே.

## சுட்டெழுத்து ✓

9. சுட்டிக் காட்டுவதற்குப் பயன்படும் எழுத்து சுட்டெழுத் தாம். தூரத்தில் இருக்கிற ஒருவனைச் சுட்டிக்காட்ட வேண்டுமானால், 'அவன்' என்று சுட்டிக் காட்டுகிறோம். இதனால் அகரம் தூரத்திலிருக்கிற பொருள்களைச் சுட்டிக் காட்டுகிறது என்பது தெரிகிறதல்லவா? கிட்ட இருக்கிறவனைச் சுட்டிக் காட்ட வேண்டுமானால், 'இவன்' என்று சொல்லுகிறோம். இதனால் இகரம் கிட்ட இருக்கிற பொருள்களைச் சுட்டிக் காட்டுகிறது என்பது தெரிகிறதன்றோ?

அகரமும் இகரமும் சுட்டிக் காட்டுவதனால் சுட்டெழுத்துக்கள் என்று பெயர் பெறும். இவற்றோடு உகரமும் ஒரு சுட்டெழுத்து. அது நடுவிலும், பின் புறத்திலும், தலைக்கு மேலேயும் உள்ள பொருள்களைச் சுட்டிக்காட்டும்.

அகர இகர உகரங்கள் சொல்லுக்கு முதலில் தனித்து வந்து சுட்டிக் காட்டினால் மட்டும் சுட்டெழுத்தாகும். உகரம் சுட்டுதல் உலக வழக்கில் இல்லை; பாட்டுக்களில் வரும்.

அவன், அம்மனிதன், அம்மரம்
இவன், இம்மனிதன், இம்மரம்
உவன், உம்மனிதன், உம்மரம்.

(ந.)

ந. சூ.—"அ, இ, உ முதல் தனிவரில் சுட்டே."

### பயிற்சி உ.

பின் வருகின்ற சொற்றொடர்களிலுள்ள சுட்டெழுத்துக்களை எடுத்து எழுதுக:—

1. அன்னையாரே! அம் மாம்பழம் தந்திடுவீர்.
2. ஆசிரியர் அவனுக்கு அறிவு புகட்டினார்.
3. இங்கே வருபவர் இன்பம் அடைவர்.
4. அந் நாட்டு அரசன் அரண்மனை அழகானது.
5. இப் பக்கத்தே இருப்பன இளமரங்கள்.

## வினா எழுத்து

10. கேள்வி கேட்பதற்குப் பயன்படுகிற எழுத்துக்கள் வினா எழுத்துக்கள் என்று பெயர் பெறும். அவை ஆ, ஓ, எ என்ற மூன்றும். (வினா—கேள்வி)

ஆ, ஓ என்ற இரண்டு எழுத்துக்களும் சொல்லுக்கு ஈற்றில் நின்று வினாவாகும்.

அவனா செய்தான்?
அவனோ செய்தான்?
எவன் செய்தான்?

### பயிற்சி ௩.

பின் வருகின்ற சொற்றொடர்களிலுள்ள வினா எழுத்துக்களை எடுத்து எழுதுக:—

1. எங்கள் எழுத்தாணியை எவன் எடுத்தவன்?
2. முருகனா எழுத்தாணியை எடுத்தான்?
3. எச்செயல் செய்தால் இன்பம் எய்தும்?
4. கந்தனோ இதனை மொழிந்தனன்?
5. நீ இதனை எப்படிச் செய்தாய்?

———

## உ. மெய் எழுத்துக்கள்

**11.** மெய் எழுத்துக்கள் பதினெட்டு. அவை க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் என்பன.

### வல்லினம், மெல்லினம், இடையினம்

ஒலி வேறுபாட்டால் அவற்றை மூன்று வகையாகப் பிரிக்கலாம். க், ங், ய் என்ற மூன்று எழுத்துக்களையும் எடுத்துக் கொள்வோம். இவற்றில் "க்" என்பது வன்மையாகவும், "ங்" என்பது மென்மையாகவும், "ய்" என்பது வன்மையாக வாவது மென்மையாகவாவது இல்லாமல் அவை இரண்டுக்கும் இடையிட்டும் ஒலிக்கின்றன.

க் என்பதைப் போலவே ச், ட், த், ப், ற் என்ற ஐந்து எழுத்துக்களும் வன்மையாக ஒலிக்கின்றன. வன்மையாக ஒலிக்கிற எழுத்துக்கள் வல்லெழுத்துக்கள். அவை வல்லினம் என்றும் பெயர் பெறும்.

ந. சூ.—"வல்லினம் க, ச, ட, த, ப, ற என ஆறே" (ச)

ங் என்ற எழுத்தைப் போலவே ஞ், ண், ந், ம், ன் என்ற ஐந்து எழுத்துக்களும் மென்மையாக ஒலிக்கின்றன. மென்மையாக ஒலிக்கிற எழுத்துக்கள் மெல்லெழுத்துக்கள். அவை மெல்லினம் என்றும் பெயர் பெறும்.

ந. சூ.—"மெல்லினம் ங, ஞ, ண, ந, ம, ன என ஆறே"(ரு)

ய் என்ற எழுத்தைப் போலவே ர், ல், வ், ழ், ள் என்ற ஐந்து எழுத்துக்களும் வன்மைக்கும் மென்மைக்கும், இடையிட்டு ஒலிக்கும் தன்மையன. இடையிட்டு ஒலிக்கிற

எழுத்துக்கள் இடை எழுத்துக்கள். அவை இடையினம் என்றும் பெயர் பெறும்.

ந. சூ.—"இடையினம் ய, ர, ல, வ, ழ, ள என ஆறே." (சு)

பயிற்சி ச.

பின் வருகின்ற சொற்றொடர்களிலுள்ள மெய் எழுத்துக்களை எடுத்து எழுதி அவை இன்னவகை என எழுதுக:—

1. பட்டாடை கண்டான், புகழ்ந்து பேசினான்.
2. கற்றவர் விழுங்குங் கனியே கடவுள்.
3. நெஞ்சங் குளிரச் செஞ்சொல் பகர்ந்தான்.
4. எவ்வுலகத்தில் இப்புகழ் நிகழ்ந்தது?
5. அன்னவர் வெய்ய உரை புகன்றனரா?

---

## உயிர்மெய் எழுத்துக்கள்

12. உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும் சேர்ந்து உண்டாகிற எழுத்துக்கள் உயிர்மெய்யெழுத்துக்கள் என்று பெயர் பெறும்.

க்+அ=க. ங்+அ=ங. ய்+அ=ய.

13. பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் ஒவ்வொரு மெய்யின்மேலும் தனித்தனி சேரும். அவ்வாறு சேர உயிர்மெய்யெழுத்துக்கள் (கஉ×கஅ=உகசு) இருநூற்றுப் பதினாறு ஆகும்.

## உயிர்மெய்யின் பிரிவுகள்

14. உயிர்மெய் எழுத்துக்களை (1) உயிரை வைத்தும் (2) மெய்யை வைத்தும் இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

1. உயிரை வைத்து—(1) உயிர்மெய்க் குறில் ரு × கஅ = கூ0
(2) உயிர்மெய் நெடில் எ × கஅ = கஉசு

ஆக உயிர்மெய் உகசு

2. மெய்யை வைத்து—

(1) வல்லின உயிர்மெய்க் குறில் சு × ரு = கூ0
,, ,, நெடில் சு × எ = சஉ } எஉ

(2) மெல்லின உயிர்மெய்க் குறில் சு × ரு = கூ0
,, ,, நெடில் சு × எ = சஉ } எஉ

(3) இடையின உயிர்மெய்க் குறில் சு × ரு = கூ0
,, ,, நெடில் சு × எ = சஉ } எஉ

ஆக உயிர் மெய் உகசு

### பயிற்சி ரு.

பின் வருகின்ற சொற்றொடர்களிலுள்ள உயிர்மெய் எழுத்துக்கள் இன்னவகை என எழுதுக:—

1. மெய் யுரைப்பவர்கள் மேன்மை யடைவர்.
2. பொய் புகல்வோர்தாம் பொல்லாங் கெய்துவர்.
3. மன்னனைக் காட்டிலும் மதிப்புடையோர் கற்றோர்கள்.
4. தீயவர் சேர்க்கையால் தீமை வந்தணுகும்.
5. நல்லவர் கூட்டம் நலம்பல தந்திடும்.

---

## ச. ஆய்த எழுத்து

15. ஆய்தம் போல மூன்று புள்ளி வடிவமாக இருப்பது ஆய்த எழுத்து: ஃ

இஃது எப்போதும் சொல்லுக்கு நடுவிலேயே வரும். அஃது, இஃது, எஃது.

---

| | உயிர் கஉ. | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
| மெய் | உயிர்மெய் உகசு. | | | | | | | | | | | |
| க் | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த் | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |

# உ. சொல்லிலக்கணம்

## சொல்லின் பிரிவுகள்

**16.** நம்மால் சொல்லப்பட்ட ஒரு பொருளை உணர்த்துவது சொல் எனப்படும். ஒரே எழுத்தாக இருந்தாலும் பொருளை உணர்த்துமேல் அது சொல்லாம்.

பூ, தீ, நீ, வா, சா, போ.

ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துக்களால் ஆகிப் பொருளை உணர்த்துவனவும் சொற்களே.

நீர், நிலம், நிற்றல், வந்தனன், நிற்கின்றான்.

**17.** சொல் (1) பெயர்ச்சொல், (2) வினைச்சொல், (3) இடைச்சொல், (4) உரிச்சொல் என நான்கு வகைப்படும்.

---

## க. பெயர்ச் சொல்

**18.** ஏதாவது ஒன்றின் பெயரைக் குறிக்கின்ற சொல்லே பெயர்ச்சொல். அது (1) பொருட் பெயர், (2) இடப் பெயர், (3) காலப் பெயர், (4) சினைப் பெயர், (5) பண்புப் பெயர், (6) தொழிற் பெயர் என ஆறு வகைப்படும். (சினை-உறுப்பு ; பண்பு-குணம்.)

பொருட் பெயர்—மரம், கல், பறவை, மாடு, முருகன்.
இடப்பெயர்—வீடு, காடு, மலை, மதுரை, விண்.
காலப்பெயர்—நாழிகை, நாள், மாதம், ஆண்டு, மாலை.
சினைப்பெயர்—கை, கால், கண், கிளை, வால்.
பண்புப்பெயர்—வெண்மை, நன்மை, அழகு, பெருமை, சினம்.

தொழிற்பெயர்—இருத்தல், நடத்தல், எழுதல், ஓட்டம் ஆட்டம்.

பொருளின் பெயர் பொருட்பெயர்; இடத்தின் பெயர் இடப்பெயர்; காலத்தைக் குறிக்கும் பெயர் காலப்பெயர்; உறுப்பைக் குறிக்கும் பெயர் சினைப்பெயர்; பண்பைக் குறிக்கும் பெயர் குணப்பெயர்; தொழிலின் பெயர் தொழிற் பெயர்.

பயிற்சி ௩.

பின் வருவனவற்றிலுள்ள பெயர்ச் சொற்களை எடுத்து அவை இன்னின்ன வகை என எழுதுக :—

1. மாடு மேய்த்தான்; பாலைக் கறந்தான்.
2. வெள்ளை மாடு நேற்றுக் கீழே விழுந்ததால் கால் முறிந்தது.
3. கழைக் கூத்தாடியின் செயல்கள் வேடிக்கையானவை.
4. கந்தன் வீட்டில் புதையல் கிடைத்தது.
5. பட்டிக்காட்டுப் பையன் யானையைப்பார்த்து அஞ்சினான்.
6. வேடன் அம்பால் விண்ணில் பறவையை எய்தான்.

19. பெயர்ச் சொல்லில் அறிய வேண்டுவன :—(1) திணை, (2) பால், (3) எண், (4) இடம் (5) வேற்றுமை என்ற ஐந்துமே.

க. திணை

20. பெயர்ச் சொற்களை உயிருள்ள பொருள்களின் பெயர்கள் என்றும், உயிரில்லாத பொருள்களின் பெயர்கள் என்றும் இரண்டு வகையாகப் பிரிக்கலாம். உயிருள்ளன அறிவுள்ள பொருள்கள். உயிரில்லன அறிவற்ற பொருள் கள். உயிருள்ள பொருள்கள் மக்கள், விலங்குகள், பறவை கள், ஊர்வன. உயிரில்லாத பொருள்கள் கல், மரம், கடல்.

மக்கள் பகுத்தறிவு உடையவர்களாகையால் அவர்கள் உயர் வகுப்பாக எண்ணப்படுகிறார்கள்; மக்களைத் தவிர மற்றைய ஊர்வன, பறப்பன, நடப்பன முதலிய பகுத்தறிவு இல்லாத உயிருள்ள பொருள்களும், கல், மரம் முதலிய உயிரில்லாத பொருள்களும் உயர்வு அல்லாத வகுப்பாக எண்ணப்படுகின்றன.

(வகுப்பு-திணை.)

உயர்ந்த வகுப்பு (அல் + திணை) - அஃறிணை.

ந. சூ.—"மக்கள் தேவர் நரகர் உயர்திணை
மற்று உயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை." (எ)

## உ. பால்

21. உயர்திணைப்பால்.—உயர்திணை மூன்று உட்பிரிவுகளை உடையது. அப்பிரிவுகள் பால் என்று சொல்லப்படும்; (பால்-பிரிவு.) அவை (1) ஆண்பால், (2) பெண்பால், (3) பலர்பால் என்பன.

மகன், மகள், மக்கள்.

ந. சூ.—"ஆண் பெண் பலர் என முப்பாற்று உயர்திணை." (அ)

22. ஆண்பால்.—ஓர் ஆணைக் குறிப்பது ஆண்பால்.
மகன், முருகன், தோழன்.

23. பெண்பால்—ஒரு பெண்ணைக் குறிப்பது பெண்பால்.

மகள், வள்ளி, தோழி.

24. பலர்பால்.—ஒருவருக்கு மேற்பட்டவர்களைக் குறிப்பது பலர்பால். ஒருவருக்கு மேற்பட்டவர்களைக் குறிப்பது ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தா

லும் சரி, ஆணும் பெண்ணுமாகச் சேர்ந்து இருந்தாலும் சரி பலர்பாலே.

கிழவர், கிழவியர், மக்கள்.

25. அஃறிணைப் பால்.—அஃறிணை இரண்டு உட் பிரிவுகளை உடையது.

அப்பிரிவுகளுக்கும் பால் என்றே பெயர். அவை (1) ஒன்றன்பால், (2) பலவின்பால் என்பன.

**ந. சூ.—"ஒன்றே பல என்று இருபாற்று அஃறிணை, (ஃ)!'**

26. ஒன்றன்பால்.—ஒரு பொருளைக் குறிப்பது ஒன்றன்பால்.

புலி, செடி, கல், காக்கை.

27. பலவின்பால்.—ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களைக் குறிப்பது பலவின்பால்.

புலிகள், செடிகள், கற்கள், காக்கைகள்.

## ௩. எண்

28. பொருள்களின் எண்ணிக்கையே எண்ணும். அஃது ஒருமை என்றும், பன்மை என்றும் இருவகைப் படும்.

29. ஒருமை.—ஒன்றைக் குறிப்பது ஒருமை. இதில் ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் என்ற மூன்று பால்களும் அடங்கும். அதனால் இவை மூன்று பால்களும் ஒருமைப் பால்கள் என்று பெயர் பெறும்.

ஒருமைப் பால்கள்

| | |
|---|---|
| க. ஆண்பால் | மகன், தோழன், கந்தன், அரசன் |
| உ. பெண்பால் | மகள், தோழி, வள்ளி, அரசி |
| ௩. ஒன்றன்பால் | கிளி, பசு, காளை, கல், பலகை. |

30. பன்மை.—ஒன்றுக்கு மேற்பட்டவற்றைக் குறிப்பது பன்மை. இதில் பலர்பாலும் பலவின்பாலும் அடங்கும். அதனுல் இவை இரண்டு பால்களும் பன்மைப் பால்கள் என்று பெயர் பெறும்.

பன்மைப் பால்கள்

| | |
|---|---|
| க. பலர்பால் | மக்கள், தோழர், தோழியர், அரசர், அரசிகள். |
| உ. பலவின்பால் | கிளிகள், பசுக்கள், காளைகள், கற்கள், பலகைகள். |

பயிற்சி எ.

பின் வருகின்ற சொற்களுக்குத் திணை, பால், எண் பிரித்து எழுதுக:—

நாரை, மங்கை, உறவினர், மைந்தன், நல்லவன், இரும்பு, தென்னை, பருந்து, வேங்கைகள், பந்துக்கள், அழகன், புழுக்கள், வேந்தன், பெண்கள், நண்பன், நண்டு, தோழர், பசு, இறைவன்.

---

## ச. இடம்

31. பேச்சில் பெயர்ச்சொற்கள் குறிக்கும் இடமே இடமெனப்படும். பேசும்பொழுது ஒருவன் பேசுகிருன். மற்ருெருவன் முன் நின்று கேட்கிருன். "நண்பா! நான் நாளைக்கு மதுரைக்குப் போகிறேன். நீ முருகனுடன் வருகிருயா?" என்ற பேச்சில், "நான்" என்ற பெயர்ச்சொல்லின் பொருள் பேசுகின்றவன் தன்னிடம் வருகிறது; "நீ" என்ற பெயர்ச்சொல்லின் பொருள் முன் நிற்பவனிடம் போகிறது. "மதுரை" என்ற சொல்லின் பொருள் தன்னிடமும் வராமல் முன் நிற்பவனிடமும் போகாமல் படர்ந்து சென்று வேருேர் இடத்தைக் குறிக்கின்றது. "முருகன்" என்ற சொல்லின் பொருளும் பேசுபவனையும் கேட்பவனையும் விட்டுவிட்டுப்

படர்ந்து சென்று வேறொருவனிடம் (முருகனிடம்) செல்கிறது.

32. தன்னிடம் வருவது தன்மையிடம். முன் நிற்பவனிடம் போவது முன்னிலையிடம். படர்ந்து சென்று வேறொருவனிடமோ, வேறொரு பொருளினிடமோ போவது படர்க்கையிடம்.

இங்ஙனமாக இடம் (1) தன்மையிடம், (2) முன்னிலையிடம், (3) படர்க்கையிடம் என மூன்று வகைப்படும்.

ந. சூ.—"தன்மை, முன்னிலை, படர்க்கை மூஇடனே." (மு)

க. தன்மையிடம்—யான், யாம், யாங்கள், நான், நாம், நாங்கள்.

உ. முன்னிலையிடம்—நீ, நீர், நீங்கள்.

மேலேகண்ட உதாரணங்களால் தன்மையிலும் முன்னிலையிலும் பால் பகுத்து அறிய முடியாது என்பது தெரிகிறது. அவற்றை ஒருமை, பன்மை என்று மட்டுமே பிரித்தறியலாம்.

ந. படர்க்கையிடம்—அவன், அவள், அவர், அவர்கள், அது, அவை, நண்பன், முருகன், தாய், தந்தை, பெண், பெண்கள், காக்கை, காக்கைகள், மரம், மரங்கள், கல், கற்கள், மதுரை, திருநெல்வேலி.

மேலே கண்ட உதாரணங்களால், படர்க்கையில் திணை, பால், எண் பகுத்தறியலாம் என்பது தெரிகிறது.

பயிற்சி அ

பின் வருகின்ற சொற்றொடர்களிலுள்ள பெயர்ச்சொற்களுக்குத் திணை, பால், இடம் பிரித்து எழுதுக:—

1. வேலன் எனக்கு அருமை நண்பன்.
2. அவன் உனக்கு நன்மை செய்வான்.
3. நான் அவனை நாளைக் காண்பேன்.

4. நீங்கள் இருவரும் சென்னைக்கு என்னுடன் வருகிறீர்களா ?
5. குழந்தைகள் மழலைச்சொல் குழலினும் இனிது.
6. நாம் எப்போதும் நன்மையே செய்யவேண்டும்.

## ரு. வேற்றுமை

33. வேற்றுமை என்றால் வேறுபாடு ; அதாவது வித்தியாசம். பெயரோடு சில உருபுகள் சேர்வதால் அதன் பொருள் வேறுபடுகிறது. அவ்வுருபுகள் வேற்றுமை உருபுகள் எனப்படும். வேற்றுமையைக் காட்டும் குறியாக வரும் சொல் வேற்றுமை உருபு ஆம்.

உதாரணமாக மரம் என்ற பெயரை எடுத்துக் கொள்வோம். இதனோடு ஐ என்ற உருபைச் சேர்த்தால் மரத்தை என்று ஆகிறது. மரம் என்றால் அது வளர்ந்தது, பூத்தது என்று அதனுடைய செயலை நாம் எதிர்பார்க்கிறோம். மரத்தை என்றால் அதை ஒருவன் வளர்த்தான், வெட்டினான் என்று வேறொருவனுடைய செயலை நாம் எதிர்பார்க்கிறோம். ஐ என்ற உருபு இங்ஙனமாக மரம் என்ற பெயரின் பொருளை வேற்றுமை செய்கிறது. பெயரின் பொருளை வேற்றுமை செய்வதே வேற்றுமை என்று சொல்லப்படுகிறது. ஐ என்ற உருபைப்போலவே ஆல், கு முதலிய உருபுகளும் பெயரின் பொருளை வேற்றுமை செய்யும். இவ்வாறு வேற்றுமை செய்யும் உருபுகள் வேற்றுமை உருபுகள் என்று பெயர் பெறும்.

34. வேற்றுமை எட்டு வகைப்படும்.

35. முதல் வேற்றுமை :—யாதொரு மாறுபாடும் அடையாமல் இருக்கிற பெயரே முதல் வேற்றுமை.

உதாரணம் :—மகன், மரம், வாள்.

36. இரண்டாம் வேற்றுமை :—ஐ என்ற உருபைப் பெற்றுவருவது இரண்டாம் வேற்றுமை.

உதாரணம்:—மகனை, மரத்தை, வாளை.

37. மூன்றாம் வேற்றுமை:—ஆல், ஓடு முதலிய உருபுகளைப் பெற்று வருவது மூன்றாம் வேற்றுமை.

உதாரணம் :—மகனால், மகனோடு, மரத்தால், மரத்தோடு, வாளோடு.

38. நான்காம் வேற்றுமை :—கு என்ற உருபைப் பெற்று வருவது நான்காம் வேற்றுமை.

உதாரணம்:—மகனுக்கு, மரத்துக்கு, வாளுக்கு.

39. ஐந்தாம் வேற்றுமை:—இல், இன் என்ற உருபுகளைப் பெற்று வருவது ஐந்தாம் வேற்றுமை.

உதாரணம் :—மகனில், மகனின், மரத்தின், வாளில்.

40. ஆறாம் வேற்றுமை :—அது, உடைய முதலிய உருபுகளைப் பெற்று வருவது ஆறாம் வேற்றுமை.

உதாரணம் :—மகனது, மரத்தினது, வாளது, மகனுடைய, மரத்தினுடைய, வாளினுடைய.

41. ஏழாம் வேற்றுமை :—இல், இடத்தில் முதலிய உருபுகளைப் பெற்று வருவது ஏழாம் வேற்றுமை.

உதாரணம் :—மகனிடத்தில், மரத்தில், வாளில்.

42. எட்டாம் வேற்றுமை :—பெயரையுடைய பொருளைத் தன் முகமாகக் கூப்பிடுவதே எட்டாம் வேற்றுமை.

உதாரணம் :—மகனே, முருகா, குழந்தாய்.

43. முதல் வேற்றுமையை எட்டாம் வேற்றுமையாக்கும் வழிகள் :—

முதல் வேற்றுமை பின் வரும் வழிகளில் எட்டாம் வேற்றுமையாக மாறும்.

(1) அருகில் இருப்போரை அழைக்கும்போது மாறுபடாது— தம்பி, சிவகாமி.

(2) கடைசி எழுத்துத் திரிதலால்—தம்பீ, சிவகாமீ, தந்தாய்.

(3) கடைசியில் ஏகாரமாவது ஓகாரமாவது சேர்தலால்— தோழனே, தம்பியோ.

(4) ஈற்றெழுத்துக்குமுன் எழுத்துத் திரிதலால்—மக்காள்.

(5) ஈற்றெழுத்துக் குறைவதால்— தோழ, முருக.

(6) ஈற்றெழுத்துக் கெட்டு முன் எழுத்துத் திரிதலால்— அண்ணா, முருகா.

## பயிற்சி கூ.

பின்வரும் சொற்றொடர்களிலுள்ள வேற்றுமை உருபுகளை எழுதி அவை இன்ன வேற்றுமை எனவும் எழுதுக:—

1. நீ எனக்கு உதவியைச் செய்தாய்.
2. நான் என்றும் நன்றியை மறவேன்.
3. வேலன் வாளால் மரத்தை வெட்டினான்,
4. அண்ணா! பறவை மரத்தின் நீங்கிற்று.
5. எனது பசு வீட்டில் இருக்கிறது.
6. தம்பி! என்னுடைய புத்தகம் எங்கே?

## பயிற்சி ம.

பின் வருகின்ற சொற்களை எட்டாம் வேற்றுமையாக மாற்றி எழுதுக:—

அண்ணன், மாமன், அத்தை, பாட்டன், கண்ணன், முனிவன், மன்னன்.

---

# உ. வினைச்சொல்

44. ஒரு பொருளின் செயலைக் குறிக்கும் சொல்லே வினைச்சொல். செயல் என்றாலும், வினை என்றாலும், தொழில் என்றாலும் பொருள் ஒன்றே.

க. வினைச்சொல்லின் வகை:—வினைச்சொல் தெரிநிலை, குறிப்பு என இரண்டு வகைப்படும்.

## க. தெரிநிலை வினை

எழுவாயையும், காலத்தையும் வெளிப்படையாகக் காட்டுவது தெரிநிலை வினை.

அவன் படித்தான்—இதில் படித்தான் என்ற வினைச்சொல் அவன் என்ற எழுவாயையும், படித்து முடிந்த இறந்த காலத்தையும் வெளிப்படையாகத் தெரிவிக்கிறது.

## உ. குறிப்பு வினை

எழுவாயை மட்டும் வெளிப்படையாகக் காட்டி, காலத்தைக் குறிப்பாகக் காட்டுவது குறிப்புவினை. அவன் பெரியன் - இதில் பெரியன் என்ற வினைச்சொல் பெருந்தன்மையனாக இருந்தான், இருக்கிறான், இருப்பான் என விரிந்து காலத்தைக் குறிப்பாகக் காட்டுகிறது. அவன் என்ற எழுவாய் வெளிப்படையாகத் தெரிகிறது.

அவன் அன்று பெரியன்—இதில் பெரியன் என்னும் குறிப்புவினை இறந்தகாலத்தைக் காட்டி நின்றது.

இவன் இன்று பெரியன்—நிகழ்காலம்.

எவன் நாளைப் பெரியன்—எதிர்காலம்.

## ங. வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம்

45. வினைச்சொல் இரண்டு வகையான நிலைகளை உடையது. ஒன்று பொருள் முடிந்து நிற்பது; மற்றொன்று பொருள் முடியாது குறைந்து நிற்பது. வந்தான் என்பதில் பொருள் முடிந்துநிற்கிறது. 'வந்த, வந்து' இவற்றில் பொருள் முடியாமல் குறைந்து நிற்கிறது.

பொருள் முடிந்து நிற்பது வினைமுற்று என்று பெயர் பெறும். பொருள் முடியாமல் நிற்கிற வினைச்சொல் எச்சம் என்று பெயர் பெறும்.

46. எச்சத்தின் வகைகள் : எச்சம் இரண்டு வகைப் படும். 'வந்த, வந்து' என்ற இரண்டு எச்சங்களையும் எடுத் துக்கொள்வோம். வந்த என்பது மனிதன், அல்லது குதிரை, அல்லது பறவை என்று ஏதேனும் ஒரு பெயரைக் கொண்டு முடியும். வந்து என்பது போனான், அல்லது நின்றான், அல்லது மறைந்தான் என்று ஏதேனும் ஒரு வினையைக் கொண்டு முடியும். வந்த என்பதும், வந்து என்பதும் எச் சங்களாக இருந்தாலும் வந்த என்பது பெயரைக் கொண்டு முடிகிறது. வந்து என்பது வினையைக்கொண்டு முடிகிறது. பெயரைக் கொண்டு முடிவது பெயரெச்சம், வினையைக் கொண்டு முடிவது வினையெச்சம்.

பயிற்சி கக.

பின் வருகின்ற சொற்களில் வினைமுற்றைப் பெயரெச்ச வினையெச்சங்களாகவும், வினையெச்சத்தை வினைமுற்று வினை யெச்சங்களாகவும், வினையெச்சத்தை வினைமுற்றுப் பெய ரெச்சங்களாகவும் மாற்றுக :—

1. சென்றான், 2. படித்து, 3. ஓடினான், 4. நின்ற, 5. தூங்கினான், 6. எறிந்தான், 7. உண்ட, 8. எழுந்து, 9. பாடிய 10, எடுத்து.

## ச. காலம்

47. வந்தான், வருகிறான், வருவான் என்ற சொற்க ளில் வந்தான் என்பது முந்தியே வந்துவிட்டான் என்பதைக் குறிக்கிறது. வருகிறான் என்பது இப்போதே வந்துகொண் டிருக்கிறான் என்பதைக் குறிக்கிறது. வருவான் என்பது இனி வந்து சேர்வான் என்பதைக் குறிக்கிறது. ஆதலால் வந்தான் என்பது கழிந்துபோன அதாவது இறந்த காலத் தையும், வருகிறான் என்பது நடக்கிற அதாவது நிகழ் காலத் தையும், வருவான் என்பது இனி வரும் அதாவது எதிர் காலத்தையும் குறிக்கின்றன என்பது தெரிகிறது.

1. வந்தான்—இறந்தகாலம்
2. வருகிறான்—நிகழ்காலம்
3. வருவான்—எதிர்காலம்

48. காலத்தைக் காட்டும் உறுப்பு :—படித்தான், படிக்கிறான், படிப்பான் என்ற மூன்று சொற்களையும் எடுத்துக் கொள்வோம். இவை மூன்றிலும் முதலில் "படி" என்பது செயலைக் காட்டுகிறது. கடைசியில் "ஆன்" என்பது பாலைக் காட்டுகிறது. ஆனால் இச்சொற்கள் நடுவிலேயே மாறுபடுகின்றன. படித்தான் என்பதில் "த்" என்பதும், படிக்கிறான் என்பதில் "கிறு" என்பதும், படிப்பான் என்பதில் "ப்" என்பதும் இடையில் இருக்கின்றன. சொல்லின் இடையில் இருப்பது இடை நிலை என்று பெயர்பெறும். ஆகையால் இடை-நிலையினாலேயே சொற்களின் காலம் மாறுகிறது என்பதை அறிகிறோம்.

படி + த் + ஆன் = படித்தான்.
படி + கிறு + ஆன் = படிக்கிறான்.
படி + ப் + ஆன் = படிப்பான்.

பயிற்சி கஉ.

பின் வருகின்ற சொற்களில் இறந்த காலத்தை நிகழ்கால எதிர்காலங்களாகவும், நிகழ்காலத்தை இறந்தகால எதிர்காலங்களாகவும், எதிர்காலத்தை இறந்தகால நிகழ்காலங்களாகவும் மாற்றி எழுதுக :—

1. நின்றான், 2. போவான், 3. ஓடுகிறான், 4. படிப்பான், 5. உண்பான், 6. எழுந்தான். 7. மறைகிறான், 8. செல்கின்றான், 9. கற்றான், 10. இருப்பான்.

---

## ௩. இடைச்சொல்

49. தனித்து வராமல் பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையும் ஒட்டி அவற்றிற்கு இடையே வரும் சொல்

இடைச்சொல் எனப்படும். ஐ, ஆல், கு, இன், அது, கண் முதலிய வேற்றுமை உருபுகளும், உம், ஏ, ஓ, மற்று, பிற முதலியனவும் இடைச்சொற்கள்.

மரத்தை—ஐ இடைச்சொல்.
அவனும் வந்தான்—உம் இடைச்சொல்.
அவனே வந்தான்—ஏ இடைச்சொல்.
அவனோ பெரியான்—ஓ இடைச்சொல்.
மற்றொன்று கொடு—மற்று இடைச்சொல்.
பிற பொருள்—பிற இடைச்சொல்.

---

## ச. உரிச்சொல்

50. பெயர்ச்சொல், வினைச்சொல் இவற்றின் தன்மையை உணர்த்தும் சொல் உரிச்சொல். இது தனியே வழங்காது, பெயர் வினைகளை அடுத்தே வரும்.

நனி பேதை
சாலப் பேசினான்.

---

# ரு. சொற்றொடர் இலக்கணம்

## சொற்றொடர்

51. ஏதேனும் ஒரு கருத்து முடியும்படி சொற்கள் தொடர்ந்து நிற்பது சொற்றொடர். (சொல் + தொடர் = சொற்றொடர் = வாக்கியம்.)

## சொற்றொடரில்
## நாம் தெரிந்து கொள்ள வேண்டுவன

நாம் ஒவ்வொரு சொற்றொடரிலும் எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்களைத் தெரிந்துகொள்ள வேண்டும். சில வற்றில் செயப்படுபொருள் இராது.

| எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை |
|---|---|---|
| நான் | முருகனைக் | கண்டேன் |
| முருகன் | — | வந்தான் |

## க. அடைமொழி

52. எழுவாயையாவது பயனிலையையாவது செயப்படு பொருளையாவது அடையும் மொழி அடைமொழியாம்.

| | அடைமொழி | எழுவாய் | அடைமொழி | செயப்படு பொருள் | அடைமொழி | பயனிலை |
|---|---|---|---|---|---|---|
| 1 | நல்ல | பையன் | கெட்ட | சொல்லை | என்றும் | சொல்லான் |
| 2 | தீய | பையன் | நல்ல | நடையை | மிகவும் | வெறுப்பான் |

## உ. நிறுத்தல் அடையாளம்

சில-நிறுத்தல் அடையாளங்களை இப்போது தமிழில் நாம் வழங்கி வருகிறோம். அவை ஆறு வகைப்படும். அவையாவன :—

1. ஒரு கைந்நொடிப்பொழுது நிறுத்தலுக்கு , Comma
2. இரண்டு ... ... ; Semicolon
3. மூன்று ... ... : Colon
4. நான்கு ... ... . Full Stop
5. வியப்புக்குறி ... ! Exclamation Mark
6. வினாக்குறி ... ? Interrogation Mark

ஒவ்வொரு சொற்றொடரும் முடியும்போது நான்கு கைந்நொடிப்பொழுது நிறுத்தப்பெற்றே பின் அடுத்த சொற்றொடர் தொடங்கப் பெறும். ஆதலால் ஒவ்வொரு சொற்றொடரின் ஈற்றிலும் (Full Stop) என்ற அடையாளம் இடப்பெறும். வியப்புக் குறிப்பிற்கும் வினாக் குறிப்

பிற்கும் தனித் தனி நான்கு கைந்நொடிப்பொழுதே அளவாம்.

பயிற்சி கரு.

பின் வருகின்ற சொற்றொடர்களுக்கு நிறுத்தல் அடையாளங்கள் அமைத்து எழுதுக:—

1. தருமன் ' தம்பி நீ எங்கே போகிறாய்'' என்று கேட்டான்
2. பெண்கள் கல்வி கற்பது மிகவும் நல்லது
3. ஆகா இந்தப் பூ எவ்வளவு அழகாக இருக்கிறது
4. உனக்கு மல்லிகை மாலை வேண்டுமா
5. நண்பா என்னோடு வீட்டுக்கு வா.
6. இராமன் வீட்டுக்கு வந்து பாடத்தைப் படித்தான்
7. இராமன் உடுத்திக்கொண்டான் பள்ளிக் கூடத்துக்குப் போனான்.

---

# ச. சந்தி இலக்கணம்

## சந்தி

53. ஒரு சொல்லின் கடைஎழுத்தும் அதனை அடுத்து வரும் மற்றொரு சொல்லின் முதல் எழுத்தும் ஒன்று சேருவது சந்தியாம். (சந்தி—புணர்ச்சி.)

## சந்தியின் வகை

சந்தி இயல்பு, விகாரம் என இரு வகைப்படும். (விகாரம்—மாறுதல்.)

## இயல்பு

54. எழுத்துக்கள் மாறுதல் அடையாமல் சொற்கள் சேர்ந்து வருவது இயல்பாம். பொன் + மணி = பொன்மணி.

### க. மெய்யும் உயிரும் சேர்வது

மெய்யெழுத்தின்மேல் உயிரெழுத்து வந்து சேர்வது இயற்கை. படம் + எழுதினான் = படமெழுதினான்.

ந. சூ.—"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே." (கக)

## விகாரம்

55. விகாரம் மூன்று வகைப்படும்: (1) தோன்றல் (2) திரிதல், (3) கெடுதல்.

1. தோன்றல்—அந்த + பையன் = அந்தப் பையன்.
மகனை + கண்டான் = மகனைக் கண்டான்.

2. திரிதல்—இடம் + கண்டான் = இடங் கண்டான்.
பொன் + குடம் = பொற் குடம்.

3. கெடுதல்—மரம் + வேர் = மரவேர்.
சிவன் + வணக்கம் = சிவவணக்கம்.

ந. சூ.—"தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்." (கஉ)

## உ. உடம்படு மெய்

56. உயிரும் உயிரும் சேரும்போது அவ்விரண்டையும் உடன்படுத்துவதற்காக ஒரு மெய் அவ்விரண்டிற்கும் இடையே தோன்றும். உடம்படுத்துவதற்காகத் தோன்றும் மெய் உடம்படு மெய் எனப் பெயர்பெறும். முதலில் இருக்கும் சொல்லின் ஈற்றில் இ, ஈ, ஐ இருக்க, பின்வரும் சொல்லின் முதலில் உயிர்வந்தால் யகர மெய் தோன்றும்.

| நிலைமொழி | | வருமொழி | | |
|---|---|---|---|---|
| மணி | + | அழகிது | = | மணி யழகிது. |
| தீ | + | எழுந்தது | = | தீ யெழுந்தது. |
| அவை | + | அகன்றன | = | அவை யகன்றன. |

முதலில் இருக்கும் சொல் நிலைமொழி எனப்படும். பின் வரும் சொல் வருமொழி எனப்படும்.

இ, ஈ, ஐ அல்லாத மற்றைய உயிர்கள் நிலைமொழி ஈற்றில் இருக்க வருமொழி முதலில் உயிர் வந்தால் வகர மெய் தோன்றும்.

பலா + அழகிது = பலா வழகிது
பூ + அழகிது = பூ வழகிது

ஏகாரம் நிலைமொழி யீற்றில் இருக்க வருமொழி முதலில் உயிர் வந்தால் யகரமும் தோன்றும்; வகரமும் தோன்றும்.

அவனே + அடித்தான் = அவனே யடித்தான்
சே + அழகிது = சே வழகிது

இதனால் உடம்படுமெய் (1) யகரமும், (2) வகரமும் ஆக இரண்டு என அறிகிறோம்.

ந சூ.—"இ, ஈ ஐவழி யவ்வும், ஏனை
உயிர் வழி வவ்வும், ஏமுன் இவ் விருமையும்
உயிர்வரின் உடம்படு மெய்என்று ஆகும்." (கரு)

பயிற்சி கச

பின் வருகின்ற சொற்களைச் சேர்த்து எழுதி விதி கூறுக:—

1. மடம் + அகன்றது
2. பனை + ஓலை
3. நான் + அறிந்தேன்
4. ஈ + என்றான்
5. தா + என்றான்
6. தாலி + அழகானது
7. அண்ணன் + இவன்
8. என்னை + அழைத்தாள்

———

# இரண்டாம் பாரம் (Second Form)

# க. எழுத்திலக்கணம்

## க. உயிரும், மெய்யும்

1. உயிர் உடம்போடு சேர்ந்தும் இருக்கும்; சேராமல் தனித்தும் இருக்கும். அதுபோலவே அகரம் முதலிய எழுத்துக்கள் மெய்யெழுத்துக்களோடு சேர்ந்தும் வழங்கும்; சேராமல் தனித்தும் வழங்கும். இங்ஙனம் அகரம் முதலிய பன்னிரண்டு எழுத்துக்களும் நம்முடைய உயிர் போலத் தனித்தும் மெய்யோடு சேர்ந்தும் இயங்குகின்றன. அதனுல் அவை 'உயிர்' என்று பெயர் பெற்றன.

தனித்து அ, ஆ, இ, ஈ எனவும்
சேர்ந்து க, கா, கி, கீ எனவும் வழங்கும்.

உயிர் இல்லாத உடம்பு அழிந்துபோகும். உயிரின் உதவியில்லாமல் உடம்பு தனித்து இயங்காது. அதுபோலவே, க் முதலிய எழுத்துக்கள் உயிரெழுத்துக்களின் உதவியில்லாமல் தனித்துச் சொல்ல முடியாத நிலைமையை உடையன. "க்" என்ற எழுத்தை "இக்" என்ருவது அகரம் சேர்த்து (க்+அ) க என்ருவது சொல்ல முடியும். "ட்" என்ற எழுத்தை "இ" என்ருவது அகரம் சேர்த்து (ட்+அ) ட என்ருவது சொல்ல முடியும். மெய்யெழுத்துக்களை உச்சரிப்பதற்கு உயிர் எழுத்துக்கள் ஒன்று அவற்றிற்கு முன்னுவது பின்னுவது சேரவேண்டும். இங்ஙனம் க் முதலிய பதினெட்டும் நம்முடைய உடல்போல் இருப்பதால் அவை 'மெய்' என்று பெயர் பெற்றன, (உடல்—மெய்).

## உ. எழுத்தின் உருவம்

2. ஒருவர் தம் மனத்தில் தோன்றும் எண்ணங்களை வெளிப்படையாகப் பிறர் அறியும்படி வாயினல் சொல்லுகிரார். அவ்வொலி செவியிற் புகுந்து அவருடைய எண்ணங்களைப் பிறர் அறிந்து கொள்ளும்படி செய்கிறது. வாயினல் சொல்லப்படுவது சொல். நமது உடம்பிற்கு எவ்வாறு தலை, கை, கால், மார்பு, வயிறு முதலியன உறுப்புக்களோ, அவ்வாறே சொல்லுக்கு உறுப்பாவன எழுத்துக்களே. எழுத்துக்கள் பேச்சளவிலேயே இருந்துவந்தன. பேச்சு வடிவம் என்பது ஒலி வடிவம். ஒலி வடிவால், அருகில் எதிராக இருப்பவர்களுக்கு ஒருவன் தன் அகத்தெழும் எண்ணங்களை வெளியிட முடியும்; தொலைவிலிருப்பவர்கள் கிட்டவந்தாலொழிய அவன் எண்ணத்தை அறியமுடியாது. அதனல் அறிஞர் ஒலி வடிவாக இருந்த எழுத்துக்களுக்கு வரி வடிவம் ஏற்படுத்தினர்கள். அதனல் கண் காணுத இடத்திலிருப்பவர்களும் ஒருவர் நினைப்பதை மற்ருருவர் அறிந்து கொள்ள முடிகிறது.

எழுதப் பெறுவதனலே எழுத்து என்ற பெயர் உண்டாயிற்று. எழுத்துக்கள்: (1) ஒலி வடிவம் (2) வரிவடிவம் என்ற இருவகை உருவங்களை உடையன. ஒலி வடிவம் வாயால் பேசப்பட்டுச் செவியால் அறியப்படுவது; வரி வடிவம் கையால் எழுதப்பட்டுக் கண்ணல் அறியப்படுவது.

## ங. மாத்திரை

3. அரிசி, எண்ணெய் முதலிய பொருள்களை நாம் நாழி, உழக்கு, ஆழாக்குகளால் அளந்து அறிகிரும். புளி, சர்க்கரை முதலிய பொருள்களைப் பலத்தால் நிறுத்து அளந்து அறிகிரும். துணி முதலியவற்றை அடிக்

கோலால் அளந்து அறிகிறோம். அதுபோல் எழுத்துக்களை அளந்து அறிவதற்கு மாத்திரை என்ற அளவு கருவி இருக்கிறது. மாத்திரை ஒரு கால அளவு. நாம் இயல்பாகக் கண்ணை மூடித் திறக்கும் நேரமே ஒரு மாத்திரையாம்; நாம் இயல்பாகக் கண்ணை மூடும் நேரம் அரை மாத்திரை.

மெய் எழுத்துக்களும், ஆய்தமும் தனித்தனி அரை மாத்திரை அளவுடையன. குறிலும், உயிர்மெய்க் குறிலும் தனித்தனி ஒரு மாத்திரையாம். நெடிலும், உயிர் மெய்ந் நெடிலும் தனித்தனி இரண்டு மாத்திரை அளவுடையன.

எழுத்துக்களை மனம்போன போக்கில் ஒலித்தல் தவறு; அவ் அவற்றிற்கு ஏற்பட்ட அளவின் படியே சொல்ல வேண்டும்

ந. சூ.—"இயல்பு எழும் மாந்தர் இமைநொடிமாத் திரை" (க)

### பயிற்சி க.

பின் வருகின்ற சொற்றொடர்களிலுள்ள எழுத்துக்களின் அளவை எடுத்தெழுதி ஒவ்வொரு சொற்றொடர்க்கும் மொத்த அளவையும் எழுதுக:—

1. அரச மரம் அழகிற் சிறந்தது.
2. வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ?
3. கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியே!
4. தென்னாடுடைய சிவனே போற்றி.
5. எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி.

---

## ச. வினாவெழுத்து ✓

4. ஆ, ஓ, எ இவற்றைத் தவிர வேறு வினா எழுத்துக்களும் உண்டு. அவை ஏ, யா என்பன. இவை சொல்லுக்கு முதலில் நின்று வினா எழுத்துக்கள் ஆகும்.

ஏது? யாவன்? யாது?

5. ஏகாரம் மொழிக்கு ஈற்றில் நின்றும் வினவாகும். அவ்வாறு ஆவது உலக வழக்கில் இல்லை.

ந. சூ—"எயா முதலும், ஆ ஓ ஈற்றும்
ஏ இரு வழியும் வினஆ தும்மே." (2)

## ரு. இனவெழுத்து.

6. உருவத்தாலாவது ஒலியாலாவது ஒன்றுபோ லிருக்கும் எழுத்துக்கள் இன எழுத்துக்களென்று சொல்லப் படும். உயிரெழுத்துக்களில் குறிலுக்கு நெடில் இனம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ, ஆ | இ, ஈ | உ, ஊ | எ, ஏ | ஒ, ஓ |

7. ஐகாரத்திற்கும், ஔகாரத்திற்கும் தனித் தனி இனம் இல்லை. ஆனால் அவற்றில் ஒலிபற்றி ஐகாரத்திற்கு இகரமும், ஔகாரத்திற்கு உகரமும் இனமாம்.

அ + இ = ஐ; அ + உ = ஔ.

| | |
|---|---|
| ஐ, இ | ஔ, உ |

8. வல்லெழுத்துக்கு மெல்லெழுத்து இனம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க், ங் | ச், ஞ் | ட், ண் | த், ந் | ப், ம் | ற், ன் |

9. இடையினம் ஆறும் ஒரே இனம்.

| |
|---|
| ய், ர், ல், வ், ழ், ள் |

க், ங்; ச், ஞ்; ப், ம்.

10. ஙகரம் ககரத்தோடும், ஞகரம் சகரத்தோடும் மகரம் பகரத்தோடும் பெரும்பாலும் சேர்ந்து வரும்.

| | | |
|---|---|---|
| சங்கு | பஞ்சு | நம்பு |
| தெங்கு | தஞ்சம் | வம்பு |
| பங்கம் | வஞ்சம் | கம்பம் |
| தங்கம் | பஞ்சம் | தம்பம் |

ட், ண்; த், ந்; ற், ன்.

**11.** ணகரம் டகரத்தோடும், நகரம் தகரத்தோடும், னகரம் றகரத்தோடும் சேர்ந்து வரும். இக் காரணத்தால் ணகரம் டண்ணகர மென்றும், நகரம் தந்நகரமென்றும், னகரம் றன்னகரமென்றும் ஒலி வேறுபாடு தோன்ற வழங்கப் பெறும்:

| | | |
|---|---|---|
| வண்டி | சந்து | கன்று |
| நண்டு | பந்து | என்று |
| கண்டம் | தந்தம் | மன்றம் |
| பண்டம் | பந்தம் | நன்று |

ர், ற்.

**12.** ரகரம் இடையினம், றகரம் வல்லினம். ஆதலின் இவை இடையின ரகரம் என்றும், வல்லின றகரம் என்றும் சொல்லப்பெறும். ரகரத்தை நுனி நாக்கினல் சிறிது மென்மையாகச் சொல்ல வேண்டும். றகரத்தையோ நுனி நாக்கினல் அழுத்திச் சொல்ல வேண்டும். ரகரம் இருக்க வேண்டிய இடத்தில் றகரத்தை உச்சரித்தால் பொருள் மாறுபட்டுவிடும். ஆகையால் இவற்றை எழுதும்போதும் சொல்லும்போதும் விழிப்பாகவே இருக்க வேண்டும்.

அரம் (ஓர் கருவி); அறம் (தருமம்)

மரம்; மறம் (தீச் செயல்)

கரி (யானை, கறுப்பான பொருள்); கறி (மாமிசம், காய்கறி.)

அரி (வெட்டு) ; அறி (தெரிந்துகொள்)
கரத்தல் (மறைத்தல்) ; கறத்தல் (வெளிப்படுத்தல்)
கூரிய (கூர்மையான) ; கூறிய (சொன்ன)
சிரை (மயிர் கழி) ; சிறை (சிறைச்சாலை).

பயிற்சி உ.

பின் வருகின்ற சொற்றொடர்களி லுள்ள எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக:—

1. அரந்தான் செய்தால் அருமே தீவினை.
2. முன் மரத்தில் எரினுல் தன்புருவாய்.
3, அறசன் நீதியில் தவருதல் கூடாது.
4. கூறம்பாயினும் வீறியம் பேசேல்,

---

## ௬. தம் அளவிற் குறுகி ஒலிக்கும் எழுத்துக்கள்

13. சில எழுத்துக்கள் தமக்கு இயல்பாக உள்ள மாத்திரையில் குறுகி ஒலிக்கும். அவை இ, உ, ஐ, ஔ, ஃ, ம் என்ற ஆறு எழுத்துக்களாம். அவை இகரக் குறுக்கம், உகரக் குறுக்கம், ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம் ஆய்தக் குறுக்கம், மகரக் குறுக்கம் என்று சொல்லப் பெறும். அவற்றில் இகரக் குறுக்கம் குற்றியலிகரமென் றும், உகரக் குறுக்கம் குற்றியலுகர மென்றும் சொல்லப் பெறும்.

இயல்பாக இரண்டு மாத்திரை அளவுள்ள ஐகாரமும், ஔகாரமும் குறுகும்போது தனித்தனி ஒரு மாத்திரை அளவே ஒலிக்கும். ஒரு மாத்திரை அளவுள்ள இகரமும், உகரமும் குறுகும்போது அரை மாத்திரை அளவே ஒலிக் கும். அரை மாத்திரை அளவுள்ள ஆய்தமும், மகரமும் குறுகும்போது கால் மாத்திரை அளவே ஒலிக்கும்.

## எ. குற்றியலுகரம்

14. உகரம் குறுகுவதற்கு மூன்று காரணங்கள் உண்டு.

1. உகரம் வல்லெழுத்தோடு கூடி நிற்க வேண்டும். (கு, சு, டு, து, பு, று).

2. அது சொல்லின் ஈற்றில் நிற்க வேண்டும்.

படகு, பஞ்சு, மாடு, பத்து, பருப்பு, பயறு.

3. அது 'பசு,' 'மடு,' 'மது,' என்ற இடங்களிற் போலத் தனிக் குற்றெழுத்தை அடுத்து நிற்கக் கூடாது.

குற்றியலுகரத்தை உகரத்திற்கு முன்னால் இருக்கும் எழுத்தைக்கொண்டு இன்ன தொடர்க் குற்றியலுகரம் என்று பிரித்தறியலாம். மச்சு, மஞ்சு, மாசு என்ற மூன்று சொற்களையும் எடுத்துக் கொள்வோம். இவற்றில், பசு என்ற சொல்லிற்போலத் தனிக் குறிலை அடுத்து வராமல், ச் என்ற வல்லெழுத்தின் மேல் ஏறிய உகரம் சொல்லின் ஈற்றில் வந்திருத்தலினால் குற்றியலுகரம். மேலே கண்ட மூன்று சொற்களின் ஈற்றிலும் சுகரமே இருக்கிறது; ஆனால் இவை ஒவ்வொன்றிலும் அதற்கு முந்திய எழுத்து வேறு வேறாக இருக்கிறது.

மச்சு:—இதில் ச் என்ற வல்லெழுத்தைக் குற்றியலுகரம் தொடர்ந்திருக்கிறது.

மஞ்சு :—இதில் ஞ் என்ற மெல்லெழுத்தைக் குற்றியலுகரம் தொடர்ந்திருக்கிறது.

மாசு:—இதில் மா என்ற நெடிலைக் குற்றியலுகரம் தொடர்ந்திருக்கிறது.

வல்லெழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் வன்றொடர்க் குற்றியலுகரம் என்று பெயர் பெறும்.

மெல்லெழுத்தைத் தொடர்ந்து வருவது மென்றொடர்க் குற்றியலுகரம் என்று பெயர் பெறும். தனி நெட்டெழுத்தைத் தொடர்ந்து வருவது நெடிற்றொடர்க் குற்றியலுகரம் என்று பெயர் பெறும்.

மார்பு என்ற இடத்துக் குற்றியலுகரத்திற்கு முன்னால் "ர்" என்ற இடையெழுத்து இருக்கிறது. இப்படி இடையெழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் இடைத்தொடர்க் குற்றியலுகரம் என்று பெயர் பெறும். எஃகு—இதில் குற்றியலுகரத்திற்கு முன்னால் ஆய்த எழுத்து வந்திருப்பதால் இஃது ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம் என்று பெயர் பெறும்.

அது என்ற இடத்துப்போலத் தனிக்குறிலை அடுத்து வருவது குற்றியலுகர மன்று என்று படித்தோம். ஆடு என்ற இடத்துப்போலத் தனி நெடிலை அடுத்து வருவது நெடிற்றொடர்க் குறியலுகரம் எனவும் படித்தோம். மலடு மலாடு என்ற சொற்களில் உகரம் குறிலையும், நெடிலையும் அடுத்து வந்திருக்கிறது. மலடு என்ற சொல்லில் உகரத்திற்கு முன்னால் ல என்ற குறில் வந்திருக்கிறது- இருந்தாலும் இது தனிக்குறில் அன்று ; ல என்ற குறிலுக்கு முன்னால் ம என்ற வேறொரு குறில் இருக்கிறது. ஆதலால் மலடு என்பது குற்றியலுகரமே. இஃது உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் எனப் பெயர் பெறும். மலாடு என்ற சொல்லிற் குற்றியலுகரம் லா என்ற நெடிலைத் தொடர்ந்து வந்திருந்தாலும் இது மாடு என்பதிற் போலத் தனி நெடிலை அடுத்து வராமல் ம என்ற குறிலோடு சேர்ந்த நெடிலை அடுத்து வந்திருப்பதால் இதுவும் உயிர்த்தொடர்க் குற்றியலுகரமே.

இதுவரை படித்ததிலிருந்து குற்றியலுகரம் ஆறு வகைப்படுமென அறிந்து கொண்டோம்.

1. உயிர்த்தொடர்—படகு, படாது.
2. நெடிற்றொடர்—மாது.
3. வன்றொடர்—பட்டு.
4. மென்றொடர்—நெஞ்சு.
5. இடைத்தொடர்—சால்பு.
6. ஆய்தத்தொடர்—கஃசு.

வன்றொடர், மென்றொடர், இடைத்தொடர் ஆகிய மூன்றிலும் சுக்கு, நுங்கு, சார்பு எனக் குற்றியலுகரம் தனிமெய்யெழுத்தையே அடுத்து வரும்.

## அ. முற்றியலுகரம்

15. உகரம் வல்லெழுத்தோடு கூடிச் சொல்லுக்கு ஈற்றில் வந்தாலும் தனிக் குறிலை அடுத்து வந்திருந்தால் அது முற்றியலுகரம். முற்று இயல் உகரம்—முழு இயல்பையுடைய உகரம்; அதாவது ஒரு மாத்திரை ஒலிப்பது.

புகு, பசு, மது, தபு, அறு.

வல்லெழுத்தின் மேல் ஏறி வாராமல் சொல்லுக்கு ஈற்றில் ஏனைய மெய்களின்மேல் ஏறி வரும் உகரமும் முற்றியலுகரமே.

### பயிற்சி ௩.

பின் வருகின்ற சொற்களில் உகரம் குற்றியலுகரமா, முற்றியலுகரமா என்று எழுதுவதோடு குற்றியலுகரமானால் இன்ன தொடர் எனப் பகுத்தெழுதுக:—

அன்பு, விளக்கு, மருந்து, பாட்டு, நாறு; அரும்பு, மூன்று, நாற்று, அளவு, செம்பு, கணு, பிறப்பு, காசு, வடு, கதவு, பல்கு,

கரும்பு, உறவு, பலாசு, எஃகு, வட்டு, முகடு, இஃது, அரசு, தேடு, சார்பு, மாசு, மறு, வல்லூறு.

### ௯. குற்றியலிகரம்

16. குற்றியலுகரத்திற்குப் பின் யகரம் வந்தால் குற்றியலுகரம் இகரமாகத் திரியும். அவ்வாறு திரிந்த இகரம் குற்றியலிகரம் எனப் பெயர் பெறும்.

காடு + யாது = காடியாது
வீடு + யாது = வீடியாது

மியா என்ற அசைச்சொல்லில் உள்ள இகரமும் குற்றியலிகரமே.

---

# உ. சொல்லிலக்கணம்

## க. பெயர்ச்சொல்

பெயரின் பிரிவுகள்

17. பெயர்ச்சொற்களை (1) பொருட்பெயர், (2) இடப்பெயர், (3) காலப்பெயர், (4) சினைப்பெயர், (5) பண்புப்பெயர், (6) தொழிற்பெயர் என ஆறு வகையாகப் பிரிக்கலாம் எனப் படித்தோம். அப் பெயர்களினடியாகவும் பெயர்கள் பிறக்கும்.

(1) பொருட்பெயர்: பொருளடியாகப் பிறந்த பெயர்:

பொன் பொன்னன், பொன்னி.
செல்வம் செல்வன், செல்வி.
குழை (காதணி) குழையான், குழையாள்.

(2) இடப்பெயர்: இடமடியாகப் பிறந்த பெயர்:

| | |
|---|---|
| தோட்டம் | தோட்டக்காரன்; தோட்டக்காரி. |
| மலை | மலையன், மலைச்சி. |
| மதுரை | மதுரையான், மதுரையாள். |

(3) காலப்பெயர்: காலமடியாகப் பிறந்த பெயர்:

| | |
|---|---|
| திருவாதிரை | திருவாதிரையான், திருவாதிரையாள். |
| காலை | காலையான், காலையாள். |
| மூவாண்டு | மூவாட்டையான், மூவாட்டையாள். |

(4) சினைப்பெயர்: சினையடியாகப் பிறந்த பெயர்:

| | |
|---|---|
| தோள் | தோளன், தோளி. |
| செங்கண் | செங்கண்ணன், செங்கண்ணி. |
| குழைக்காது | குழைக்காதன், குழைக்காதள். |

(5) பண்புப்பெயர்: பண்படியாகப் பிறந்த பெயர்:

| | |
|---|---|
| பெருமை | பெரியன், பெரியள். |
| கருமை | கரியன், கரியள். |
| சினம் | சினத்தான், சினத்தாள். |

(6) தொழிற்பெயர்: தொழிலடியாகப் பிறந்த பெயர்:

| | |
|---|---|
| ஓதுதல் | ஓதுவான், ஓதுவாள். |
| ஈதல் | ஈவான், ஈவாள் |
| நடத்தல் | நடப்பான், நடப்பாள். |

பெயர்களின் வேறு பிரிவுகள்:

பெயர்கள் (1) திணையாலும், (2) பாலாலும், (3) எண்ணாலும், (4) இடத்தாலும் பிரித்தறியப்படும்.

## க. திணையால் வருபெயர்

18. திணையால் வருபெயர் (1) உயர்திணைப்பெயர் என்றும், (2) அஃறிணைப்பெயர் என்றும் இருவகையாம்.

(1) உயர்திணைப்பெயர்—மகன், மகள், மக்கள்.
பெரியான், பெரியாள், பெரியார்.

(2) அஃறிணைப்பெயர்—மரம், கல், வீடு, புலி,
கரடிகள், காக்கைகள்.

## ௨. பாலால் வருபெயர்

19. உயர்திணைப் பெயர்கள் பாலால் (1) ஆண்பாற் பெயர், (2) பெண்பாற் பெயர், (3) பலர்பாற் பெயர் என மூன்று வகையாகவும், அஃறிணைப் பெயர்கள் பாலால் (4) ஒன்றன்பாற் பெயர், (5) பலவின்பாற் பெயர் என இரு வகையாகவும் பிரிக்கப்பெறும். இங்ஙனம் பாலால் வரு பெயர் ஐந்து வகைப்படும்.

உயர்திணை 1. ஆண்பாற்பெயர்—நண்பன், முருகன், அவன்.
2. பெண்பாற்பெயர்—தோழி, வள்ளி, அவள்.
3. பலர்பாற்பெயர்—நண்பர், தோழியர், அவர்.

அஃறிணை 4. ஒன்றன்பாற்பெயர்—காக்கை, கல், பசு, அது.
5. பலவின்பாற்பெயர்—காக்கைகள், கற்கள், பசுக்கள், அவை.

## ௩. எண்ணால் வருபெயர்

20. பாலால் வரு பெயர்கள் எண்ணால், (1) ஒருமைப் பெயர் என்றும், (2) பன்மைப் பெயர் என்றும் இருவகையாகப் பிரிக்கப்பெறும்.

1. ஒருமைப் பெயர்—ஆண்பாற் பெயர்—மகன், அவன்.
பெண்பாற் பெயர்—மகள், அவள்.
ஒன்றன்பாற் பெ[illegible]வை, அது.

2. பன்மைப்பெயர்—பலர்பாற் பெயர்—மக்கள், அவர்.
பலவின்பாற் பெயர்—பறவைகள், அவை.

## ௪. இடத்தால் வருபெயர்

21. இடத்தால் வருபெயர் (1) தன்மைப் பெயர், (2) முன்னிலைப் பெயர், (3) படர்க்கைப் பெயர் என மூவகைப் படும். இவை தம்முள் தனித்தனி ஒருமை, பன்மை என இருவகையாம்.

1. தன்மைப் பெயர்—ஒருமை—நான், யான்.
பன்மை—நாம், யாம், நாங்கள், யாங்கள்.

2. முன்னிலைப் பெயர்—ஒருமை—நீ
பன்மை—நீர், நீவிர், நீங்கள்.

3. படர்க்கைப் பெயர்—ஒருமை—அவன், அவள், அது, மரம், ஊர், கல், மகன், மகள், பறவை.
பன்மை—அவர், அவை மரங்கள், ஊர்கள், கற்கள், மக்கள், பறவைகள்.

பெயர்ச் சொற்களில் வேறு வகைகளும் உண்டு :

அவை : (1) சுட்டுப் பெயர், (2) வினாப் பெயர், (3) அளவுப் பெயர், (4) முறைப் பெயர் என்பன.

## ௫. சுட்டுப் பெயர்

22. சுட்டிக் காட்டுகின்ற பெயர் சுட்டுப் பெயர். அது சுட்டெழுத்துக்களாகிய அகர, இகர, உகரங்களின் அடியாகப் பிறக்கும்.

அவன், அவள், அவர், அது, அவை.
இவன், இவள், இவர், இது, இவை.
உவன், உவள், உவர், உது. உவை.

## ௬. வினாப்பெயர்

23. வினாப்பொருளை உணர்த்தும் பெயர் வினாப்பெயர் (வினா=கேள்வி). அது மொழிகளுக்கு முதலில் வருகின்ற எ, ஏ, யா என்ற மூன்று வினா எழுத்துக்களின் அடியாகத் தோன்றும்.

எவன், எவள், எவர், எது, எவை.
ஏவன், ஏவள், ஏவர், ஏது, ஏவை.
யாவன், யாவள், யாவர், யாது, யாவை.

## ௭. அளவைப்பெயர்

24. பொருள்களை அளந்தறியும் அளவுகளை உணர்த்தும் பெயர்கள் அளவைப் பெயர்கள். அளவை (1) எண்ணல், (2) எடுத்தல், (3) முகத்தல், (4) நீட்டல் என நான்கு வகைப்படும்.

1. எண்ணலளவைப் பெயர் :—ஒன்று, இரண்டு, மூன்று என எண்ணி அறிவது எண்ணலளவை.

2. எடுத்தலளவைப் பெயர்:—பலம், சேர், வீசை என நிறுத்து அறிவது எடுத்தலளவை.

3. முகத்தலளவைப் பெயர்.—ஆழாக்கு, உழக்கு, நாழி என முகந்து அளந்தறிவது முகத்தலளவை.

4. நீட்டலளவைப் பெயர்:—அடி, சாண், முழம் என நீட்டி அளந்தறிவது நீட்டலளவை.

## அ. முறைப் பெயர்

25. தாய், தந்தை என முறையை உணர்த்தும் பெயர் முறைப் பெயராம்.

பயிற்சி ச

பின் வருகின்ற சொற்றொடர்களிலுள்ள பெயர்களை எடுத்து அவை இன்ன வகை என எழுதுக:—

1. நான் இன்று உன்னோடு மலைக்குப்போக எண்ணினேன்.
2. அவன் இங்கே எப்போது வருவான்?
3. நேற்று இதில் ஏறியவன் யார்? ?
4. மரத்தில் ஏறுதல் துன்பத்தைத் தரும்.
5. நீ நேற்று ஓர் அடி தவறினால் கிணற்றில் விழுந்திருப்பாய்.
6. பிறந்தவர் இறப்பர், இறந்தவர் மறுபடி பிறப்பர்.
7. இவ்வாண்டில் ஏன் வயல் நன்றாக விளைந்தது?
8. நாங்கள் இன்று எங்கள் மாமனாரைக் கண்டோம்.
9. அவர் எங்கள் பாட்டைக் கேட்டார்.
10. கேட்டவர் எங்களுக்கு அதை நன்றாகக் கற்பித்தார்.

## வேற்றுமை

26. பெயரின் பொருளை வேறுபடுத்துவதே வேற்றுமை. வேற்றுமையில் உருபு முதன்மையான தன்று; பொருளே முதன்மையானது. வேற்றுமை எட்டு வகைப் படும்.

ந. சூ:—"ஏற்கும் எவ்வகைப் பெயர்க்கும் ஈறாய் பொருள்
வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை" (ரு)

27. முதல் வேற்றுமையின் பொருள்:

முதல் வேற்றுமையின் பொருள் கருத்தா. கருத்தா

(1) இயற்றுதற் கருத்தா என்றும், (2) ஏவுதற் கருத்தா என்றும் இருவகைப்படும்.

1. இயற்றுதற் கருத்தா:—ஒரு செயலைத் தானே இயற்றும் தலைவன்.

கொற்றன் அரண்மனையைக் கட்டினான்.

2. ஏவுதற் கருத்தா:—ஒரு செயலை மற்றொருவனைச் செய்யும்படி ஏவுகிற தலைவன்.

அரசன் அரண்மனையைக் கட்டினான்.

கருத்தா, எழுவாய் என்பன ஒருபொருட் சொற்கள். முதல் வேற்றுமையே எழுவாய் வேற்றுமை என்று சொல்லப்படும்.

28. எழுவாய்க்குப் பயனிலையாக வருவன:

எழுவாய்க்கு (1) வினையும், (2) பெயர்ச்சொல்லும், (3) வினாவும் பயனிலையாக வரும்.

ந. சூ.—" எழுவாய் உருபு திரிபில் பெயரே
வினை, பெயர், வினாக்கொளல் அதன்பயனிலையே." (௬)

1. வினை—இறைவன் வந்தான்.
2. பெயர்—இவன் இறைவன்.
3. வினா—இறைவன் எவன்?

29. முதல் வேற்றுமையின் உருபுகள்:

முதல் வேற்றுமைக்குச் சில இடங்களில் ஆனவன், ஆனவள், ஆனவர், ஆனது, ஆனவை என்பன உருபுகளாக வரும். இவை சொல்லுருபுகள் என்று சொல்லப்படும்.

அரசனானவன் வந்தான்.
அரசியானவள் வந்தாள்.
அரசரானவர் வந்தனர்.

மரமானது வளர்ந்தது.

புலிகளானவை பாய்ந்தன.

30. இரண்டாம் வேற்றுமையின் பொருள் :

இரண்டாம் வேற்றுமையின் பொருள் செயப்படு பொருளாம்.

புலவர் பாட்டைப் பாடினார்.

இதன் உருபு ஐ ஒன்றே.

செயப்படுபொருளின் வகை :—

செயப்படுபொருள் (1) ஆக்கல், (2) அழித்தல், (3) அடைதல், (4) நீத்தல், (5) ஒத்தல், (6) உடைமை முதலாகப் பலவகைப்படும்.

(1) ஆக்கல் —வீட்டைக் கட்டினான்.
(2) அழித்தல் —செடியை ஒடித்தான்.
(3) அடைதல்—வீட்டை நண்ணினான்.
(4) நீத்தல் —பற்றை விட்டான்.
(5) ஒத்தல் —பாம்பைப் போன்றான்.
(6) உடைமை—சினத்தை உடையான்.

ந. சூ.—இரண்டாவதன் உருபு ஐயே; அதன்பொருள்
ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல்,
ஒத்தல், உடைமை ஆதி ஆகும்."

31. மூன்றும் வேற்றுமையின் பொருள்கள் :

மூன்றும் வேற்றுமையின் பொருள் (1) கருவி, (2) கருத்தா, (3) உடனிகழ்ச்சி என்பன. ஆல், ஆன், ஒடு, ஓடு என்பன இதன் உருபுகள். அவற்றில் ஆலும், ஆனும், கருவிக்கும், கருத்தாவுக்கும் வரும். ஒடுவும், ஓடுவும் உடனிகழ்ச்சியில் வரும். உடன் என்ற சொல்லுருபும் உடனிக்ழ்ச்சியில் வரும். கொண்டு என்ற சொல்லுருபு கருவிப் பொருளில் வரும்.

(1) கருவி —வாளால் வெட்டினான்.
வாளான் வெட்டினான்.
வாள்கொண்டு வெட்டினான்.

(2) கருத்தா —அரசனால் அரண்மனை கட்டப்பட்டது. அரசனான் அரண்மனை கட்டப்பட்டது.

(3) உடனிகழ்ச்சி—கன்றோடு பசு வந்தது.
தந்தையோடு மகன் வந்தான்.
அமைச்சனுடன் அரசன் வந்தான்.

(உடனிகழ்ச்சி = உடன் + நிகழ்ச்சி = ஒரே சமயத்தில் நடப்பது.)

ந.சூ.—"மூன்றாவதன் உருபு ஆல், ஆன், ஒடு, ஓடு;
கருவி, கருத்தா, உடனிகழ்வு அதன்பொருள்." (சூ)

32. கருவி: கருவி (1) முதற்கருவி, (2) துணைக்கருவி என இரண்டு வகைப்படும்.

"மண்ணால் குடத்தைச் செய்தான்"

என்ற இடத்து மண் குடத்தைச் செய்வதற்கு இன்றியமையாது வேண்டப்படுவதோடு, குடம் என்ற செயப்படுபொருள் செய்தான பின்னரும் அதனுடன் அப்பொருளாகவே இருக்கிறது. "மரத்தால் நாற்காலி செய்தான்" என்ற இடத்தும், குடத்துக்கு மண்போல நாற்காலிக்கு மரம் இருக்கிறது. மண், மரம் என்னும் இவை போல்வன முதற்கருவியாம். குடம் செய்வதற்குத் தண்டு, சக்கரம் ஆகிய கருவிகளும், நாற்காலி செய்வதற்கு உளி, சுத்தி முதலிய கருவிகளும் வேண்டும். இவை குடமும் நாற்காலியும் செய்யுமளவும் துணையாயிருந்து பின் நீங்கிவிடுவதனாலே இவை போல்வன துணைக்கருவியாம். செயப்படு பொருளாக மாறுவதற்குத் துணைசெய்வது துணைக்கருவி.

## 33. நான்காம் வேற்றுமையின் பொருள்.

"இதற்கு இது" என்று வருவதுதான் இதன் பொருள்; உருபு 'கு' என்பது.

எனக்கு அவன் நண்பன்.

இதற்கு இது என்பது பலவகைப்படும். அவற்றில் முதன்மையானவை:—(1) கொடை, (2) பகை, (3) நட்பு, (4) தகுதி, (5) அதுவாதல், (6) பொருட்டு, (7) முறை என்பன.

(1) கோடை —ஏழைகளுக்கு உணவு கொடுத்தான்.
(2) பகை —எனக்கு அவன் பகைவன்.
(3) நட்பு —எனக்கு அவன் நண்பன்.
(4) தகுதி —அரசனுக்கு உரியது செங்கோல்.
(5) அதுவாதல்—காப்புக்குப் பொன் தந்தேன்.
(பொன்னே காப்பாக மாறுகிறது.
—இதுவே அதுவாதல்)
(6) பொருட்டு —கூலிக்கு வேலை செய்தான்.
(7) முறை —எனக்கு அவன் தம்பி.

ந.சூ.—"நான்கா வதற்கு உருபாகும் குவ்வே,
கொடை, பகை, நேர்ச்சி, தகவு, அதுவாதல்,
பொருட்டு, முறை, ஆதியின் இதற்கு இது எனல்
[பொருளே." (எ)

## 34. ஐந்தாம் வேற்றுமையின் பொருள்கள்:

நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது என்பனவே ஐந்தாம் வேற்றுமையின் பொருள்கள். இல், இன் என்பன இதனுருபுகள்.

(1) நீங்கல்—ஊரின் நீங்கினான்.
மலையின் வீழ் அருவி.

(2) ஒப்பு—யானையில் பெரிது இக்காளை (இல்-போல).
(3) எல்லை—திருநெல்வேலியின் மேற்குத் திருக்குற்றாலம்.
(4) ஏது—கல்வியில் பெரியர் கம்பர் (அவர் பெரியவராவதற்கு ஏதுவாக ஆனது கல்வி).
இல்-என்பதையும் இவ்வாறே கொள்க.

ந.சூ.—"ஐந்தாவதன் உருபு இல்லும், இன்னும்
நீங்கல், ஒப்பு, எல்லை, ஏதுப் பொருளே." (அ)

35. ஆறும் வேற்றுமையின் பொருள் :

ஆறும் வேற்றுமையின் பொருள் கிழமை. கிழமை—உரிமை.

இது (1) தற்கிழமை என்றும் (2) பிறிதின் கிழமை என்றும் இருவகைப்படும். இதன் உருபுகள் அது, ஆது, அ என்பன. அது, ஆது, ஒருமைக்கும், அ பன்மைக்கும் வரும். உடைய என்பது சொல்லுருபு.

தற்கிழமையாவது தனக்கு உரிமை—எனது கை; இதில் எனது உடம்பிலேயே இருக்கிற கைக்கும் எனக்கும் உள்ள உரிமை கூறப்படுகிறது.

பிறிதின்கிழமையாவது தனக்கு உரிமை யல்லாத உரிமை. எனது பசு—இதில் எனக்கும் என்னின் வேறுபட்டதாகிய பசுவுக்கும் உள்ள உரிமை கூறப்படுறது.

தற்கிழமை ஆறு வகைப்படும். அவையாவன: (1) குணப்பண்பு, (2) தொழிற்பண்பு, (3) உறுப்பு, (4) ஒன்றன் கூட்டம், (5) பலவினீட்டம், (6) திரிபினாக்கம்.

(1) குணப்பண்புத் தற்கிழமை :—எனது நிறம்.
(2) தொழிற்பண்புத் தற்கிழமை :—எனது ஓட்டம்.
(3) உறுப்புத் தற்கிழமை :—எனது கை.

(4) ஒன்றன் கூட்டத் தற்கிழமை:—பசுக்களதுமந்தை.

(5) பலவினீட்டத் தற்கிழமை:—பறவைகளது கூட்டம்.

(6) திரிபினாக்கத் தற்கிழமை:—நெல்லினது பொரி.

ஒரே பொருளின் கூட்டம் ஒன்றன் கூட்டம். பல பொருள்களின் கூட்டம் பலவின் ஈட்டம் (ஈட்டம்—கூட்டம்.) ஒரே பொருள் திரிபினால் ஆக்கப்படுவது திரிபின் ஆக்கம். நெல்லே பொரியாக மாறுகிறது.

பிறிதின்கிழமை (1) பொருள், (2) இடம், (3) காலம் என மூன்று வகைப்படும்.

(1) பொருட்பிறிதின்கிழமை:—எனது பசு.

(2) இடப்பிறிதின்கிழமை:—எனது வீடு.

(3) காலப்பிறிதின்கிழமை:—எனது பிறந்த நாள்.

ந.சூ.—"ஆறன் ஒருமைக்கு அதுவும் ஆதுவும்,
பன்மைக்கு அவ்வும் உருபாம்; பண்பு, உறுப்பு,
ஒன்றன் கூட்டம், பலவின் ஈட்டம்
திரிபின் ஆக்கம் ஆம் தற் கிழமையும்
பிறிதின் கிழமையும் பேணுதல் பொருளே. (கூ)

36. ஏழாம் வேற்றுமையின் பொருள்:—

ஏழாம் வேற்றுமையின் பொருள் இடப்பொருள். உருபுகள் இல், இடத்தில், கண், மேல், கீழ் முதலியன.

மணியில் ஒளி. இங்கே ஒளி இருப்பதற்கு மணி என்ற பொருள் இடமாயிற்று. இங்ஙனமே இடம், காலம், சினை, பண்பு, தொழில் ஆகிய ஐந்தும் இடமாகும். இதிலும் தற்கிழமை பிறிதின்கிழமை என்ற பிரிவுகள் உண்டு.

(1) பொருள் தற்கிழமை:—மணியின்கண் ஒளி.

பொருட் பிறிதின்கிழமை:—மரத்தின்கண் ஆந்தை.

(2) இடத் தற்கிழமை—வீட்டின்கண் அறை.
இடப் பிறிதின் கிழமை—வீட்டின்கண் கன்று.

(3) காலத் தற்கிழமை—நாளின்கண் நாழிகை.
காலப் பிறிதின்கிழமை—காரின்கண் நெல்.
(கார்—கார் காலம்).

(4) சினைத் தற்கிழமை—கையின்கண் விரல்.
சினைப் பிறிதின்கிழமை—கையின்கண் வளையல்.

(5) பண்புத் தற்கிழமை—நிறத்தின்கண் அழகு.
பண்புப் பிறிதின்கிழமை—முதுமையின்கண் வறுமை.

(6) தொழில் தற்கிழமை—ஆட்டத்தின்கண் சிமிட்டல்.
தொழில் பிறிதின்கிழமை—ஆட்டத்தின்கண்பாட்டு.

ந. சூ.—"ஏழன் உருபு கண் ஆதி ஆகும் :
பொருள்முதல் ஆறும் ஓர் இரு கிழமையின்
இடனாய் நிற்றல் இதன்பொருள் என்ப." (ம)

37. எட்டாம் வேற்றுமையின் பொருள் :

எட்டாம் வேற்றுமை விளி வேற்றுமை எனப்படும். இதன்பொருள் ஒன்றைத் தன்முகமாக அழைப்பது.

இஃது அண்மையில் அதாவது அருகில் இருப்போரை அழைக்கும்போது அண்மை விளி என்றும், சேய்மையில் அதாவது தொலைவில் இருப்போரை அழைக்கும்போது சேய்மை விளி என்றும் இருவகையாம்.

முருகன், தம்பி } அண்மை விளி

முருகா, தம்பீ } சேய்மை விளி.

## பயிற்சி ரு.

பின் வரும் சொற்றொடர்களிலுள்ள வேற்றுமையின் பொருள்கள் இன்ன என எழுதுக:—

1. அவன் என்னிடம் "உன் ஊர் யாது?" என வினவினான்.
2. கண்ணன் "அண்ணா! நீ பிரம்பால் என்னை அடித்தது இன்னும் வலிக்கிறது" என்றனன்.
3. ஆசிரியர் பாடல்களைப் பாடி அவற்றால் எங்களுக்கு நல்லறிவு புகட்டினார்.
4. எனது பசு என்மேல் பாய்ந்ததால் நான் என் கைகளால் அதனுடைய கொம்புகளைப் பிடித்துக்கொண்டேன்.
5. மரத்தின் வீழ்ந்த பழங்களைச் சிறுவர் எடுத்துவந்து தம் அன்னையார்க்குத் தந்தனர்.
6. விண்ணிற் பறவையைக் கண்ணாற்கண்ட வேடன் வில்லால் அடிக்க, அது மண்ணில் வீழ்ந்தது.
7. சுந்தாருடைய அழகையும் கல்வியையும் ஒழுக்கத்தையும் கண்ட அரசன் அவரைத் தன்னுடன் அரண்மனைக்கு அழைத்துச் சென்றான்.
8. கற்றாரைக் கல்லார் விரும்புவார்களா? இனம் இனத்தோடு சேரும்.
9. பள்ளிக்கூடத்தில் மணி அடித்தவுடன் நாங்கள் எங்கள் வண்டிகளில் ஏறிக்கொண்டு அவ்விடத்திற்குப் போனோம்.
10. கல்வியைக் கற்று நல்ல ஒழுக்கத்தில் நிற்பவரை எல்லாரும் விரும்புவர்.

## உ. வினைச்சொல்

38. ஒரு பொருளின் செயலைக் குறிக்கும் சொல்லே வினைச்சொல். செயல் என்றாலும், வினை என்றாலும், தொழில் என்றாலும் பொருள் ஒன்றே.

1. திருடன் ஓடினான்.

2. கல்வி நன்மையைத் தருகிறது.
3. அவர்கள் யானையைப் பார்த்தார்கள்.

### க. பயனிலை

39. பயனிலை பெரும்பாலும் சொற்றொடரின் கடைசியிலேயே இருக்கும். மேலே கண்ட எடுத்துக்காட்டுகளால் இது விளங்குகிறது.

### உ. எழுவாய், செயப்படுபொருள்

40. பயனிலையை எடுத்துக்கொண்டு எவன், எவள், எவர், எது, எவை என்ற வினாக்களில் ஒன்றைக் கேட்டால் வரும் விடையே எழுவாயாம்; எவனை, எவளை, எவரை, எதை, எவற்றை என்ற வினாக்களில் ஒன்றைக் கேட்டால், வரும் விடையே செயப்படுபொருளாம்.

"கல்வி அறிவைத் தருகிறது."

இச் சொற்றொடரில் ஈற்றில் இருக்கிற தருகிறது என்ற சொல்லே பயனிலை. "எது" என்ற வினாவிற்கு, "கல்வி" என்ற விடையும், "எதை" என்ற வினாவிற்கு, "அறிவை" என்ற விடையும் கிடைக்கின்றன. கல்வி என்பது எழுவாய், அறிவை என்பது செயப்படுபொருள்.

### ந. தோன்றா எழுவாய்

41. சில வினைச்சொற்களுக்கு மட்டும் எழுவாய் மறைந்து நிற்கும்.

வினா :—முருகன் வந்தானா ?

விடை :—வந்தான்.

மேலேகண்ட வினாவில் 'வந்தானா' என்பது பயனிலை. 'எவன்' என்ற வினாவிற்குக் கிடைக்கும் 'முருகன்' என்ற விடையே எழுவாய்.

மேலேகண்ட விடையில் 'வந்தான்' என்ற பயனிலை மட்டும் இருக்கிறது. 'எவன்?' என்ற வினாவிற்கு விடையாக அதனோடு சேர்ந்த சொல்லொன்றும் இல்லை யென்றாலும் 'முருகன்' என்ற விடை தானே வருகிறது. 'முருகன்' என்பது 'வந்தான்' என்ற வினைச்சொல்லுக்கு எழுவாயாக இருந்தாலும் வந்தான் என்பதன்முன் அது மறைந்தே இருக்கிறது. அதனால் அது "தோன்றா எழுவாய்" என்று சொல்லப்படும்.

## ச. காலம் காட்டும் இடைநிலைகள்

42. காலம் காட்டும் இடைநிலை (1) இறந்தகால இடைநிலை, (2) நிகழ்கால இடைநிலை, (3) எதிர்கால இடைநிலை என மூன்று வகைப்படும்.

(1) இறந்தகால இடைநிலைகள் :—

த், ட், ற், இன் என்ற நான்கு இடைநிலைகளும் இறந்தகால இடைநிலைகள்.

செய் + த் + ஆன் = செய்தான்.
கேள் + ட் + ஆன் = கேட்டான்.
கல் + ற் + ஆன் = கற்றான்.
சொல் + இன் + ஆன் = சொல்லினான்.

மேலேகண்ட இடைநிலைகளில் 'இன்' என்ற இடைநிலை 'இன்' என முழுதும் நின்றும், இகரங் கெட்டு 'ன்' என நின்றும், ன்கர ஒற்றுக் கெட்டு இகரம் மட்டும் நின்றும் இறந்த காலத்தைக் காட்டும்.

சொல் + இன் + ஆன் = சொல்லினான்.
சொல் + ன் + ஆன் = சொன்னான்.
சொல் + இ + அ = சொல்லிய.

(2) நிகழ்கால இடைநிலைகள் :—

கிறு, கின்று ஆநின்று என்ற மூன்று இடைநிலைகளும் நிகழ்கால இடைநிலைகள்.

நட + கிறு + ஆன் = நடக்கிறான்.
நட + கின்று + ஆன் = நடக்கின்றான்.
நட + ஆநின்று + ஆன் = நடவாநின்றான்.

நடக்கின்றான் என்றாலும், நடவாநின்றான் என்றாலும் நடக்கிறான் என்பதே பொருள். ஆநின்று என்ற இடைநிலை இப்போது உலகவழக்கில் இல்லை. கின்று என்பது சிறுபான்மையே வழங்குகின்றது; கிறு என்பதுதான் பெரும்பாலும் வழங்கி வருகிறது.

(3) எதிர்கால இடைநிலைகள் :—

ப், வ் என்ற இரண்டு இடைநிலைகளும் எதிர்கால இடைநிலைகள்.

நட + ப் + ஆன் = நடப்பான்.
போ + வ் + ஆன் = போவான்.

## ரு. தெரிநிலைவினை, குறிப்புவினை

43. காலம் வெளிப்படையாகத் தெரிந்த நிலைமையில் இருக்கும் வினை தெரிநிலை வினை எனப்படும்.

| இறப்பு | நிகழ்வு | எதிர்வு |
|---|---|---|
| நடந்தான், | நடக்கிறான், | நடப்பான். |
| நடந்த, | நடக்கிற, | நடக்கும். |
| நடந்து, | நடக்க, | நடக்கின். |

44. காலம் வெளிப்படையாகத் தெரிந்த நிலையில் இல்லாமல் வேறு சொற்களின் குறிப்பால் அறியும் நிலையில் இருப்பது குறிப்புவினை எனப்படும்.

பெரியவன் : நல்லவன், பெரிய, நல்ல, அன்றி, இன்றி.

### பயிற்சி ௬.

பின் வருகின்ற வினைமுற்றுக்கள் இன்ன காலம் என எழுதி அக்காலத்தை இன்ன இடைநிலை காட்டிற்று என்பதையும் எழுதுக :—

பிறந்தான், உண்டனன், வருவான், நிற்கின்றான், இருப்பான், கற்றான், போகிறான், தின்றான், சொல்வான், போனான், சொல்லாநின்றான், எண்ணுகிறான்.

## ௬. வினைமுற்று

45. வினைமுற்று (1) தெரிநிலைவினைமுற்று எனவும் (2) குறிப்பு வினைமுற்று எனவும் இரண்டு வகைப்படும்.

(1) தெரிநிலை வினைமுற்று :—வந்தான், வருகிறான், வருவான்.

(2) குறிப்பு வினைமுற்று :—பெரியன்
நேற்றுப் பெரியன் (இறந்த காலம்)
இன்று பெரியன் (நிகழ்காலம்)
நாளைப் பெரியன் (எதிர்காலம்)

பெரியன் என்ற வினைமுற்று தானே நேரில் காலங் காட்டவில்லை. அதன்முன் உள்ள நேற்று, இன்று, நாளை என்ற சொற்களைக்கொண்டே குறிப்பாகக் காலம் தெரிகிறது.

தெரிநிலைவினைமுற்று :—

46. தெரிநிலை வினைமுற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம் :—

(1) காலத்தால், (2) பாலால், (3) எண்ணால், (4) இடத்தால்.

1. தன்மை ஒருமை இறந்தகால வினைமுற்று ... நான் உண்டேன்.
,, உண்டனன்.

2. ,, பன்மை ,, ... நாம் } உண்டோம்.
நாங்கள் } உண்டனம்.

3. ,, ஒருமை நிகழ்கால ,, ... நான் உண்கிறேன்.
,, உண்கின்றனன்.

4. ,, பன்மை ,, ,, ... நாம் } உண்கிறோம்.
நாங்கள் } உண்கின்றனம்.

5. ,, ஒருமை எதிர்கால ,, ... நான் உண்பேன்.

6. ,, பன்மை ,, ,, ... நாம், நாங்கள் உண்போம்.

7. முன்னிலை ஒருமை இறந்தகால ,, ... நீ உண்டாய்.

8. ,, பன்மை ,, ,, ... நீர் உண்டீர்.
நீங்கள் உண்டீர்கள்.

9. ,, ஒருமை நிகழ்கால ,, ... நீ உண்கிறாய்.

10. ,, பன்மை ,, ,, ... நீர் உண்கிறீர்.
நீங்கள் உண்கிறீர்கள்.

11. ,, ஒருமை எதிர்கால ,, ... நீ உண்பாய்.

12. ,, பன்மை ,, ,, ... நீர் உண்பீர்.
நீங்கள் உண்பீர்கள்.

## படர்க்கை யிடம்

| | காலம் | 1. ஆண் பால் | 2. பெண் பால் | 3. பலர்பால் | 4. ஒன்றன் பால் | 5. பலவின் பால் |
|---|---|---|---|---|---|---|
| 1. | இறப்பு | உண்டான் | உண்டாள் | உண்டார்<br>உண்டார்கள் | உண்டது | உண்டன |
| 2. | நிகழ்வு | உண்கிருன் | உண்கிருள் | உண்கிருர்<br>உண்கிருர்கள் | உண்கிறது | உண்கின்றன |
| 3. | எதிர்வு | உண்பான் | உண்பாள் | உண்பார்<br>உண்பார்கள் | உண்ணும் | உண்ணும் |

குறிப்பு வினைமுற்று —

47. குறிப்பு வினைமுற்றைப் பின்வருமாறு பிரிக்கலாம்:

| | இடம் | ஒருமை | பன்மை |
|---|---|---|---|
| 1. | தன்மை | நான் நல்லேன் | நாம் நாங்கள் } நல்லோம் |
| 2. | முன்னிலை | நீ நல்லாய் | நீர் நீங்கள் } நல்லீர் |

3. படர்க்கை இடம்

ஆண்பால்—நல்லவன். ஒன்றன்பால்.—நல்லது.
பெண்பால்—நல்லவள். பலவின்பால்—நல்லன.
பலர்பால்—நல்லவர்.

## எ. பெயரெச்சம்

48. பெயரெச்சம் (1) தெரிநிலைவினைப் பெயரெச்சம், (2) குறிப்புவினைப் பெயரெச்சம் என இருவகைப்படும். பெயரெச்சத்தில் திணை, பால், எண், இடம் தெரியாது.

(1) தெரிநிலைவினைப் பெயரெச்சம்
இறந்தகாலம்—உண்ட மகன்.
நிகழ்காலம்—உண்கிற மகன்.
எதிர்காலம்—உண்ணும் மகன்.

(2) குறிப்புவினைப் பெயரெச்சம் —பெரியமகன்
நல்ல மகன்.

பயிற்சி எ.

பின்வருகின்ற வினைமுற்றுக்களுக்குத் திணை, பால், எண், இடம், காலம் கூறுக:—

வென்றனன், படித்தேன், போனான், வருகிறான், பறந்தது. வருகிறாய், எழுதுவேன், பகிர்ந்தனர், செல்வாய், வந்தன.

## அ. வினையெச்சம்

**49.** வினையெச்சம் (1) தெரிநிலை வினையெச்சம், (2) குறிப்பு வினையெச்சம் என இருவகைப்படும்.

(1) தெரிநிலை வினையெச்சம்:—

இறந்தகாலம்—உண்டு வந்தான்.
நிகழ்காலம்—உண்ண வருகிறான்.
எதிர்காலம்—உண்ணின் வருவான்.

(2) குறிப்பு வினையெச்சம்:—

உணவின்றி— { வந்தான் / வருகிறான் / வருவான் }

பெரிது— { மகிழ்ந்தான் / மகிழ்கின்றான் / மகிழ்வான் }

**50.** வினையெச்சம் (1) வினைமுற்று, (2) பெயரெச்சம், (2) வினையெச்சம். (4) தொழிற்பெயர், (5) வினையாலணையும் பெயர் இவற்றிலுள்ள வினையைக்கொண்டு முடியும்.

(1) வினைமுற்று —வாழ்ந்து வந்தான்
(2) பெயரெச்சம் —வாழ்ந்து வந்த மன்னன்
(3) வினையெச்சம் —வாழ்ந்து வந்து மடிந்தான்
(4) தொழிற்பெயர் —வாழ்ந்து வருதல்
(5) வினையாலணையும் பெயர்—வாழ்ந்து வந்தவன்

## பயிற்சி அ.

பின் வருகின்ற சொற்றொடர்களிலுள்ள பெயரெச்ச வினையெச்சங்களை எழுதி அவை இன்னின்னவற்றைக் கொண்டு முடிந்தன எனவும் காட்டுக:—

1. படித்த மனிதனை அனைவரும் மிக மதிப்பார்கள்.
2. அங்கே நிற்கும் பையனை இங்கே விரைவாக அழைத்துவா.
3. பெரிய பிள்ளைகள் மிகவும் பணிவாக இருக்கவேண்டும்.
4. அவன் சிறப்பாக வாழ்ந்து வந்த செல்வன்,
5. அங்கே போய்வருவது இன்பத்தைத் தரும்.

## கo. தெரிநிலைவினை

51. தெரிநிலைவினை (1) எழுவாய், (2) கருவி, (3) இடம், (4) தொழில், (5) காலம், (6) செயப்படு பொருள் என்னும் ஆறையும் காட்டும். இந்த ஆறையும் காட்டுவது செயப்படுபொருள் குன்றாவினை எனவும் பெயர் பெறும். மேலேகண்ட ஆறில் செயப்படுபொருள் தவிர ஏனைய ஐந்தையும் காட்டுவது செயப்படுபொருள் குன்றியவினை.

(1) செயப்படுபொருள் குன்றா வினை:— 'உண்டனன்' என்ற வினைமுற்றை எடுத்துக் கொள்வோம். இஃது (1) உண்ட தலைவனாகிய எழுவாயையும், (2) உண்ட கை, வாய் முதலிய கருவிகளையும், (3) உண்ட இடத்தையும், (4)

உண்ணுதலாகிய தொழிலையும், (5) இறந்த காலத்தையும், (6) உணவாகிய செய்யப்படுபொருளையும் உணர்த்துகிறது.

(2) செயப்படுபொருள் குன்றியவினை :—'வந்தேன்' என்ற வினைமுற்றை எடுத்துக் கொள்வோம். இது (1) வந்த தலைவனையும், (2) வந்த கால்களாகிய கருவிகளையும், (3) வந்த இடத்தையும், (4) வருதலாகிய தொழிலையும், (5) இறந்த காலத்தையும் உணர்த்துகிறது. செயப்படு பொருள் மட்டும் இதில் விளங்கவில்லை.

ந. சூ—"செய்பவன், கருவி, நிலம், செயல், காலம்,
செய்பொருள் ஆறும் தருவது வினையே.'' (கக)

## ப. குறிப்புவினை

52. குறிப்புவினை எழுவாயை மட்டும் காட்டும்; ஏனைய கருவி, இடம், செயல், காலம், செயப்படு பொருள் ஆகிய இவற்றைக் குறிப்புவினை காட்டாது. இது (1) பொருள், (2) இடம், (3) காலம், (4) சினை, (5) குணம், (6) தொழில் இவற்றின் அடியாகத் தோன்றும்.

(1) பொருள் அடியாகப் பிறந்த குறிப்புவினைமுற்று:—
அணியினன், அணியினள், அணியினர்;
அணியிற்று, அணியின; அணியினேன்,
அணியினேம்; அணியினை, அணியினீர்.

(2) இடம் அடியாகப் பிறந்த குறிப்புவினைமுற்று:—
வீட்டினன், விண்ணினன்;

(3) காலம் —ஆதிரையான், ஓணத்தான்,

(4) சினை —கரிக்காலன், நெடுங்கண்ணன்.

(5) குணம்—நல்லன், கரியன்.

(6) தொழில்—நடையன், சொல்லன்.

53. ஐம்பால் மூவிடத்திற்கும் பொதுவான குறிப்பு வினைமுற்றுக்கள்.

வேறு, இல்லை, உண்டு என்னும் மூன்று குறிப்புவினை முற்றுக்களும் ஐம்பாலுக்கும் மூவிடத்திற்கும் உரியன.

| | |
|---|---|
| அவன், அவள், அவர், அது, அவை, யான், யாம், நீ, நீர். | வேறு; இல்லை; உண்டு. |

அவன் வேறு, அவள் வேறு, அவர் வேறு, அது வேறு, அவை வேறு, யான் வேறு, யாம் வேறு, நீ வேறு, நீர் வேறு ; இங்ஙனம் தனித்தனி விரிக்க.

பயிற்சி கூ.

பின்வருகின்ற தெரிநிலைவினை முற்றுக்கள் இன்னின்ன வற்றைக் காட்டுகின்றன என எழுதுக:—

அணிந்தான், போவான், படிக்கிறான், பறந்தது, தின்றன, இருப்பாள், விழுந்தனர், வெட்டினர், இறங்கினாள், பெற்றான்.

## ௩. இடைச்சொல்

54. பெயர்ச்சொற்களோடும் வினைச்சொற்களோடும் சேர்ந்து வழங்கினாலும் பெயர்ச்சொல்லும் ஆகாமல் வினைச் சொல்லும் ஆகாமல் இடைநிகரனவாய் நிற்றலின் இடைச் சொல் என்றப் பெயர் ஏற்பட்டது. பெயர்ச் சொற்களின் இடத்தும், வினைச் சொற்களின் இடத்தும் வழங்குவதால் இடைச்சொல் என்ற பெயர் இடப்பெற்றது என்றும் கூற லாம்.

55. இடைச் சொற்கள் பின் வருவன :—

1. வேற்றுமை உருபுகள் —நம்பியை, நம்பியால்

2. பெயரிடைநிலை, பெயர்விகுதி, சாரியை —தச்சன், தச்சச்சி, முடியினன்

3. வினை இடைநிலை, விகுதி, சாரியை —

| | இடைநிலை | சாரியை | விகுதி |
|---|---|---|---|
| நடந்தான் | த் | — | ஆன் |
| நடந்தனன் | த் | அன் | அன் |

4. சுட்டெழுத்துக்கள் —அ, இ, உ

5. வினா வெழுத்துக்கள் —எ, ஏ, யா, ஆ, ஓ

6. உவம உருபுகள் —போல, புரைய முதலியன

7. அசைநிலைகள் —ஏ, ஓ முதலியன

8. குறிப்பு —ஆ, ஆ! அந்தோ! பளிச்சென

9. பலபொருளில் வருவன —மற்று, ஏ, ஓ, தான், உம்.

### பயிற்சி ம.

பின்வருகின்ற சொற்றொடர்களிலுள்ள இடைச்சொற்களை எழுதுக:—

1. நீ பணிவாக இருந்தால் வெற்றியைப் பெறுவாய்.
2. ஏழைகளிடத்திலும் இன்சொல்லே பேசு.
3. அவன் பாடங்களை நன்றாகப் படித்தான்.
4. திடீரெனத் தோன்றியவன் யாவன்?
5. அவன் புலிபோன்ற தோற்றத்தை உடையவன்.

## ௪. உரிச்சொல்

56. செய்யுளுக்கே உரித்தான சொல் ஆதலால் இஃது உரிச்சொல் எனப் பெயர் பெற்றது. இது பாடல்களிலேயே பெயர் வினைகளை அடுத்து வழங்கும்.

உரிச்சொல் (1) ஒரு குணம் குறித்த பல உரிச்சொல் என்றும், (2) பலகுணம் குறித்த ஓர் உரிச்சொல் என்றும் இரண்டு வகைப்படும்.

(1) சால } இவை மிகுதி என்ற ஒரு குணம் குறித்த
நனி } பல உரிச்சொற்கள்.

(2) கடி என்பது காவல், மணம் முதலிய பல பொருள் குறித்த ஓர் உரிச்சொல்.

# ரு. சொற்றொடர் இலக்கணம்

எழுவாயும் பயனிலையும் :

57. சொற்றொடரில் எழுவாயும் பயனிலையும் திணை, பால், எண், இடம் இவற்றில் ஒன்றுபோல அமைந்திருத்தல் வேண்டும்.

(1) நான் மகிழ்ந்தேன்.
(2) நீ மகிழ்ந்தாய்.
(3) அவன் மகிழ்ந்தான்.
(4) அது மகிழ்ந்தது.
(5) அவை மகிழ்ந்தன.

சொற்றொடரின் வகைகள்

58. சொற்றொடர் (1) தனிச்சொற்றொடர், (2) தொடர்ச் சொற்றொடர், (3) கலப்புச் சொற்றொடர் என மூன்று வகைப்படும்.

(1) தனிச் சொற்றொடர்:—

ஓர் எழுவாயும், ஒரு பயனிலையும் மட்டும் இருப்பது தனிச் சொற்றொடராம்.

நான் வந்தேன். அவன் போனான்.

(2) தொடர்ச் சொற்றொடர்:—

இரண்டு மூன்று தனிச் சொற்றொடர்கள் சேர்ந்து நிற்பது தொடர்ச் சொற்றொடராம்.

(1) மழை பெய்தது; வயல் விளைந்தது.

(2) கார் காலம் வந்தது; மழை பெய்தது; குளம் நிறைந்தது; நெல் விளைந்தது.

(3) கலப்புச் சொற்றொடர் :—

எழுவாய் ஒன்றும் பலவும் ஒரே பயனிலையைக் கொள்ள வருவதும், பல பயனிலைகளைக் கொள்ள வருவதும் கலப்புச் சொற்றொடர் எனப்படும்.

(1) நானும் என் நண்பனும் வந்தோம்.

(2) நான் இங்கே வந்து பார்த்து உண்மையைக் கண்டு வேண்டுவன செய்தேன்.

ஒரு தனிச் சொற்றொடரும் அதனைச் சார்ந்த மற்றொரு சொற்றொடரும் சேர்ந்து இருப்பதும் கலப்புச் சொற்றொடரே.

நான் அவனைப் பார்த்து, "தம்பி! நீ இங்கே வா" என அழைத்தேன்.

இதில் நான் அவனை அழைத்தேன் என்பது தனிச் சொற்றொடர். "தம்பி! நீ இங்கே வா" என்பது சார்புச் சொற்றொடர்.

பயிற்சி கக

பின் வருகின்ற சொற்றொடர்கள் இன்னவகை என எழுதுக :—

1. எனக்குக் கண்ணன் நண்பன்.
2. நான் அவனை, "நண்ப! இங்கே வா," என அழைத்தேன்.
3. அவன் என்னிடம் வந்தான்.
4. நானும் அவனும் உலவிச் சென்றோம்.
5. நான் அவனைப் பார்த்து மனமகிழ்ந்து இனிய சொற்களைப் பேசி அகமகிழச் செய்தேன்.

# ச. சந்தி இலக்கணம்

## பதம்

59. பதம் (1) பகாப்பதம்; (2) பகுபதம் என இரண்டு வகைப்படும்.

(1) பகாப்பதம் :

பிரிக்க முடியாத நிலைமையில் இருப்பது பகாப்பதம். (பகா—பிரிக்கமுடியாத, பதம்—சொல்.)

அடி, உழு, நில்.

(2) பகுபதம் :—

பிரிக்கக்கூடிய நிலையில் இருப்பது பகுபதம்.

அடி + த் + ஆன் = அடித்தான்
உழு + வ் + ஆன் = உழுவான்
நில் + ற் + ஆன் = நின்றான்

பகுபதத்தின் உறுப்புக்கள் :

60. பகுபதம் (1) பகுதி, (2) விகுதி, (3) இடைநிலை, (4) சாரியை, (5) சந்தி, (6) விகாரம் என ஆறு உறுப்புக்களை உடையது.

(1) பகுதி—சொல்லின் முதலில் இருக்கும் பகாப் பதமே பகுதி.

(2) விகுதி—சொல்லின் ஈற்றிலிருப்பது.

(3) இடைநிலை—பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நிற்பது.

(4) சாரியை —இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் பெரும்பாலும் வருவது.

(5) சந்தி —இது பகுதியும் விகுதி முதலியனவும் சந்திக்கும்போது ஏற்படும் விகாரம். இது தோன்றல், திரிதல், கெடுதல் என மூன்று வகைப்படும்.

(6) விகாரம் —செய்யுள் இயற்றல் முதலிய காரணத்தால் ஏற்படும் வலித்தல், மெலித்தல், நீட்டல், குறுக்கல் முதலிய மாறுபாடுகள்.

நடந்தனன்—இதைப் பிரித்தால் பின் வருமாறு அமையும் :

பகுதி + சந்தி + இடைநிலை + சாரியை + விகுதி
நட + த் + த் + அன் + அன்.

சந்தியாகிய தகரம் நகரமானதும் சந்தி விகாரமே.

## க. குற்றியலுகரப் புணர்ச்சி

61. குற்றியலுகரத்தின் பின் உயிர் வந்தால் அக்குற்றுகரம் கெடும் ; யகரம் வந்தால் உகரம் இகரமாகத் திரியும். சில இடங்களில் முற்றியலுகரமும் இங்ஙனம் மாறுபடும்.

குற்றியலுகரம்— நாகு + அரிது = நாகரிது
நாகு + யாது = நாகியாது

முற்றியலுகரம்— கதவு + அழகிது = கதவழகிது
கதவு + யாது = கதவியாது

ந. சூ.—"உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்
யவ்வரின் இய்யாம், முற்றும் அற்று ஒரோவழி." (கஉ)

## உ. உயிரீற்றின் முன் வல்லினம்

62. உயிருக்கு முன் வருகிற க, ச, த, ப என்னும் எழுத்துக்கள் மிகும்.

| | |
|---|---|
| கடு + காய் = கடுக்காய் | கங்கை + சடை = கங்கைச்சடை |
| பசு + தலை = பசுத்தலை | சால + பகை = சாலப்பகை |

இவை சிறுபான்மை மிகாமலும் இருக்கும்.

ஏரி + கரை = ஏரிகரை

குழந்தை + கை = குழந்தைகை

ந. சூ.—“இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்
க, ச, த, ப மிகும் விதவாதன மன்னே. (௧௫)

## ௩. ணகரமும், னகரமும்

63. ண, னவுக்குப்பின் வல்லினம் வந்தால் ணகரம் டகரமாகவும், னகரம் றகரமாகவும் ஆகும்; மெல்லினமும் இடையினமும் வந்தால் இயல்பாக நிற்கும். இவ்விதி வேற்றுமைப் புணர்ச்சிக்கே. அல்வழிப் புணர்ச்சிக்கு எந்த எழுத்து வந்தாலும் இயல்பாகவே இருக்கும்.

கண் + களிறு = கட்களிறு
பொன் + குடம் = பொற்குடம்
மண் + மாட்சி = மண்மாட்சி
} வேற்றுமை

பொன் + பெரிது = பொன் பெரிது
மண் + பெரிது = மண் பெரிது
} அல்வழி

ந. சூ.—“ண, ன வல் லினம்வரட், டறவும், பிறவரின்
இயல்பும் ஆகும் வேற்றுமைக்கு; அல்வழிக்கு
அனைத்துமெய் வரினும் இயல்பா கும்மே.” (௧௬)

## ௪. மகர இறு

64. (1) மகர ஈறு வருமொழியோடு சேரும்போது

கெடும்; கெட்டு உயரீற்ன சொல்லைப்போலச் சேரும்; அதாவது வருமொழி முதலில் உயிர்வந்தால் உடம்படு மெய் தோன்றவும், வல்லினம் வந்தால் அவை மிகவும், மெல்லினமும் இடையினமும் வந்தால் இயல்பாகவும் சேரும்.

வட்டம் + ஆழி = வட்டவாழி

வட்டம் + கடல் = வட்டக்கடல்

(2) சில இடங்களில் வருமொழி முதலில் வல்லினம் வந்தால் மகர ஈறு அதற்கு இனமான மெல்லினமாகத் திரியும்.

அடும் + களிறு = அடுங்களிறு.

ந. சூ.—" மவ்வீறு ஒற்று அழிந்து உயரீறுஒப்பவும்,
வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும்." (கரு)

## பயிற்சி கஉ.

பின் வருகின்ற வினைமுற்றுக்களின் பகுபத உறுப்புக்களை விளக்கிக் கூறுக:

நின்ருன், வெட்டுகிருன், சொல்லினுன், இறப்பான், பார்த்தான்.

பின் வருகின்ற சொற்களைச் சேர்த்து விதி கூறுக:—

| | |
|---|---|
| மாடு + அகன்றது | ஏது + என்ருன் |
| காவிரி + கரை | விட்டம் + கடை |
| பொன் + தாலி | மண் + பாண்டம் |
| காசு + யாது | கடு + தின்ருன் |
| மச்சு + படி | வெல்லும் + கணக்கன் |

## மூன்றும் பாரம் (Third Form)

---

# க. எழுத்திலக்கணம்

## க. அகச்சுட்டு, புறச்சுட்டு

1. அவன் என்பதில் அகரம், அவன் என்ற சொல்லோடு சேர்ந்து நின்று சுட்டுகிறது. அம்மரம் என்பதில் அகரம் மரம் என்ற சொல்லுக்கு வெளியே இருந்து சுட்டுகிறது. சொல்லோடு சேர்ந்துநின்று அதாவது சொல்லின் அகத்திலிருந்து சுட்டுவது அகச்சுட்டு என்று பெயர்பெறும். சொல்லுக்கு வெளியே நின்று அதாவது சொல்லுக்குப் புறத்திலிருந்து சுட்டுவது புறச்சுட்டு என்று பெயர் பெறும்.

| அகச்சுட்டு | புறச்சுட்டு |
|---|---|
| அவன் | அம்மனிதன் |
| இவன் | இம்மாடு |
| உவன் | உப்பக்கம் |

## உ. அகவினா புறவினா

2. சுட்டைப்போலவே வினாவும் அகம் என்றும், புறம் என்றும் இரண்டு வகைப்படும். அகவினா சொல்லின் அகத்திலிருந்து வினவுவது. புறவினா சொல்லின் புறத்திலிருந்து வினவுவது.

எ, யா இவ்விரண்டும் சொல்லுக்கு முதலில் அகவினாவாகவும் வரும்; புறவினாவாகவும் வரும்.

அகவினா—எவன்? யாவன்?

புறவினா—எம்மரம்? யாங்ஙனம்?

ஆ, ஓ இவ்விரண்டும் சொல்லுக்கு ஈற்றில் புறவினா ஆகவே வரும்.

முருகனா? கந்தனோ?

ஏ சொல்லுக்கு முதலில் அகவினா ஆகவும், சொல்லுக்கு ஈற்றில் புறவினா ஆகவும் வரும். இது சொல்லுக்கு ஈற்றில் வருவது உலக வழக்கில் இல்லை.

ஏவன்? முருகனே?

பயிற்சி க

பின்வரும் சொற்றொடர்களிலுள்ள சுட்டெழுத்துக்களையும் வினாவெழுத்துக்களையும் எடுத்து அவை அகமா புறமா எனப் பிரித்து எழுதுக:—

1. இந்த மரம் என்ன மரம்?
2. இம்மரம் மாமரம்.
3. இஃது இனிய பழங்களைத் தருமா?
4. நான் அங்கே சென்று அவனைக் காணலாமோ?
5. காணலாம், அவ்வூர் மிகவும் அழகானது அல்லவா?
6. எவ்விடம் சென்றால் அதனைக் காணலாம்?

## ரு. ஐகாரக் குறுக்கமும் ஔகாரக் குறுக்கமும்

3. ஐகாரமும் ஔகாரமும் தனி எழுத்துக்களாக ஐ, ஔ என்று நிற்கும்போது குறுகமாட்டா. அவை சொற்களோடு சேர்ந்து வரும்போது குறுகி ஒலிக்கும்.

பையன், மனைவி, மனை, ஔவை

ஐகாரம் சொல்லுக்கு முதலிலும் வரும், இடையிலும்

வரும், ஈற்றிலும் வரும்; ஔகாரமோ சொல்லுக்கு முதலில் மட்டுமே வரும்.

## ௪. ஆய்தக் குறுக்கம்

4. ஆய்தம் சொல்லில் இயல்பாக வரும்போது குறுகாது.

எஃகு

தனிக்குறிலை அடுத்து வருகிற ல, ள என்ற இரண்டும் சொல்லுக்கு ஈற்றிலிருக்க, வருமொழி முதலில் தகரம் வந்தால் லகர ளகரங்கள் ஆய்தமாகத் திரியும்.

ந, சூ.—"குறில்வழி ல, ள, த அணையின் ஆய்தம்
ஆகவும் பெறும் அல்வழி யானே."

அல் + திணை = அஃறிணை

முள் + தீது = முஃடீது

இங்ஙனம் திரிந்த ஆய்தம் குறுகி ஒலிக்கும்.

## ௫. மகரக் குறுக்கம்

5. சில இடங்களில் லகரம் னகரமாகவும், ளகரம் ணகரமாகவும் திரிந்து நிற்கும். அவ்வாறு திரிந்து நிற்கும் னகரத்தையும் ணகரத்தையும் அடுத்து வரும் மகரம் குறுகும்.

போலும்—போன்ம்

மருளும்—மருண்ம்

மகரத்திற்குப் பின்னால் வருமொழி முதலில் வகரம் வந்தால் அங்கும் மகரம் குறுகும்.

செய்யும் + வகை = செய்யும் வகை

## ௬. அளபெடை

6. எழுத்துக்கள் செய்யுளில் மட்டும், ஓசை குறையும்

இடங்களில், நீண்டு ஒலிக்கும். அவ்வாறு நீட்டிச் சொல்வ தனால் குறைந்த ஒலியின் அளவு நிரம்பும். அளவை நிரப்பு வது அளபெடை என்று பெயர்பெறும்.

7. அளபெடை (1) உயிர் அளபெடை என்றும், (2) ஒற்றளபெடை என்றும் இரண்டு வகைப்படும்.

## எ. உயிரளபெடை

8. செய்யுளில் ஒரு மாத்திரை அளவு ஓசை குறைந் தால் உயிரை நீட்டிச் சொல்லவேண்டும். அதுதான் உயிரள பெடை. பெரும்பாலும் நெடிலே நீண்டும் ஒலிக்கும். சொல் லும்போது அந்நெடிலை நீட்டிச் சொல்லவேண்டும். எழுதும் போது அந்நெடிலுக்கு இனமாகிய குறிலை அதற்கு அடுத்து எழுதவேண்டும்.

பாஅலம், வாஅழ்க.

## அ. ஒற்றளபெடை

9. செய்யுளில் அரை மாத்திரை அளவு ஓசை குறைந்தால் ஒற்றெழுத்து அளபெடுக்கும். அதுதான் ஒற்றளபெடை. சொல்லும்போது, அளபெடுத்த ஒற்றை நீட்டிச் சொல்லவேண்டும். எழுதும்போது அவ் வொற்றை இரண்டுதடவை எழுதவேண்டும். ஒற்றுக்களோடு ஆய்த மும் சேர்ந்ததுதான். (ஒற்று—மெய்.)

எங்ங்கு, எஃஃகு, இலங்ங்கு

## க. மொழி முதல் எழுத்துக்கள்

10. பன்னிரண்டு உயிரெழுத்துக்களும், உயிருடன் கூடிய க், ச், த், ந், ப், ம், வ், ய், ஞ், ங என்னும் பத்து மெய் யெழுத்துக்களும் மொழிக்கு முதலில் வரும்.

| | | | |
|---|---|---|---|
| அரசன் | எந்தையார் | கண் | மகன் |
| ஆண்டவன் | ஏவலர் | சண்டை | வண்டு |
| இரவலன் | ஐயன் | தந்தை | யானை |
| ஈகையான் | ஒருவன் | நன்மை | ஞாயிறு |
| உடையவன் | ஓடினான் | பண்பு | ஙனம் |
| ஊரான் | ஔவையார் | | |

## ௰. மொழிக்கு முதலில் வராத எழுத்துக்கள்

**11.** மொழிக்கு முதலில் வராத எழுத்துக்கள் ட், ண், ர், ல், ழ், ள், ற், ன் என்ற எட்டு.

## கக. மொழி ஈற்று எழுத்துக்கள்

**12.** மொழிக்கு ஈற்றில் வரும் மெய் யெழுத்துக்கள் ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் என்ற பதினொன்று.

அவற்றில் ஞ், ந், வ் ஆகிய மூன்றும் இரண்டொரு சொற்களில் மட்டுமே வரும்.

| | | | |
|---|---|---|---|
| உரிஞ் | மணம் | பார் | பாழ் |
| பண் | மன்னன் | பால் | வாள் |
| வெரிந் | பாய் | தெவ் | |

## கஉ. மொழி ஈற்றில் வராதன

**13.** மொழிக்கு ஈற்றில் வராத மெய்யெழுத்துக்கள் க், ச், ட், த், ப், ற், ங் என்ற ஏழு.

## கங. போலி எழுத்துக்கள்

**14.** சில சொற்களில் ஓர் எழுத்து இருக்கவேண்டிய இடத்தில் மற்றோர் எழுத்து வந்து பொருள் மாறுபடாமல் இருக்கும். அவ்வாறு ஓர் எழுத்தைப்போல மற்றோர் எழுத்து வருவது போலி என்று சொல்லப்படும்.

| | |
|---|---|
| இளமை—இளைமை | மரம்—மரன் |
| சாம்பல்—சாம்பர் | முகம்—முகன் |
| பந்தல்—பந்தர் | நிலம்—நிலன் |
| நண்டு—ஞண்டு | திறம்—திறல் |
| ஐந்நூறு—ஐஞ்ஞூறு | மதில்—மதிள் |

## பயிற்சி உ

பின் வருவனவற்றிலுள்ள குறுக்கங்களையும், அளபெடைகளையும், போலியையும் எடுத்து இன்ன என எழுதுக:—

1. *தந்தைசொற் கேட்ட மகனது மதிபோன்ற முகம் மலர்ந்தது.*

2. *மகன் ஔவையாரது " தந்தை சொன்மிக்க மந்திரம் இல்லை " என்ற சொல்லைச் சிந்தித்து இனிச் செய்யும்வகை இதுவென ஆராய்ந்தான்.*

3. *அவன் " மதிளேறுதலும், ஞண்டுகளைக் கொல்லுதலும் தீய செயல் " எனத் தெளிந்தான்.*

4. *எஃகு என்பது அஃறிணைப் பொருள் ; முள்+தீது இவ்விரண்டையும் சேர்த்தால் முஃடீது என மாறும்.*

5. *" பைந்தொடீஇ! அவ்வீரன் எஃஃகிலங்கிய வேலன்" என அன்னையார் தம் மகளிடம் மொழிந்து அவனைத் தழீஇக் கொண்டனர்.*

# உ. சொல்லிலக்கணம்

## க. பெயர்ச்சொல்

### க. தொழிற்பெயரும், வினையாலணையும் பெயரும்

| | வினைப் பகுதி | தொழிற் பெயர் | வினையாலணையும் பெயர் |
|---|---|---|---|
| 1. | நட | நடத்தல் | நடந்தவன், நடந்தவள், நடந்தவர், நடந்தது, நடந்தவை. |
| | | நடக்கை | நடக்கின்றவன், நடக்கின்றவள், நடக்கின்றவர், நடக்கின்றது, நடக்கின்றவை. |
| | | நடப்பு | நடப்பவன், நடப்பவள், நடப்பவர், நடப்பது, நடப்பவை. |
| 2. | வா | வருதல் | வந்தவன், வந்தவள், வந்தவர், வந்தது, வந்தவை. |
| | | வருகை | வருகின்றவன், வருகின்றவள், வருகின்றவர், வருகின்றது, வருகின்றவை. |
| | | வரவு | வருபவன், வருபவள், வருபவர், வருவது, வருபவை. |
| 3. | பார் | பார்த்தல் | பார்த்தவன், பார்த்தவள், பார்த்தவர், பார்த்தது, பார்த்தவை. |
| | | பார்வை | பார்க்கிறவன், பார்க்கிறவள், பார்க்கிறவர், பார்க்கிறது, பார்க்கிறவை. |
| | | | பார்ப்பவன், பார்ப்பவள், பார்ப்பவர், பார்ப்பது, பார்ப்பவை. |

15. மேலே கண்ட எடுத்துக்காட்டுக்களால் தொழிற் பெயரும் வினையாலணையும் பெயரும் ஒரே வினைப்பகுதியின் அடியாகவே பிறந்திருக்கின்றன என்பது தெரிகிறது. இருந்தாலும் அவை தம்முள் சில வேறுபாடுகள் உடையன. அவ்வேறுபாடுகள் பின் வருவன :—

16. தொழிற்பெயர் :

(1) வினையடியாகப் பிறந்து அவ்வினைக்கே பெயராகிறது.
(2) காலம் காட்டாது.
(3) திணை, பால், எண் தெரிவதில்லை.
(4) படர்க்கை யிடத்திற்கே உரியது.

17. வினையாலணையும் பெயர் :

(1) வினையடியாகப் பிறந்து அவ்வினையையுடைய பொருளுக்குப் பெயராகிறது.
(2) காலம் காட்டுகிறது.
(3) திணையும், பாலும், எண்ணும் தெரிகிறது.
(4) மூன்று இடங்கட்கும் உரியது.

18. தொழிற்பெயர் :

(1) விகுதிபெற்ற தொழிற்பெயர், (2) முதல்நிலைத் தொழிற்பெயர், (3) முதல்நிலை திரிந்த தொழிற்பெயர் என மூன்று வகைப்படும்.

19. (1) விகுதிபெற்ற தொழிற்பெயர் :—தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, வு, தி, சி, வி, உள், காடு, பாடு, து, மை முதலிய விகுதிகளைப் பெறுவது.

| | |
|---|---|
| தல்—நடித்தல் | தி—மறதி |
| அல்—பாடல் | சி—கவற்சி |

அம்—ஆட்டம் வி—கல்வி
ஐ—கொலை உள்—கடவுள்
கை—நடக்கை காடு—சாக்காடு
வை—கோவை பாடு—முறைப்பாடு
கு—போக்கு து—நடந்தது
பு—இருப்பு மை—நடவாமை
வு—செலவு

20. (2) முதல்நிலைத் தொழிற்பெயர் :—முதல் என்பது பகுதி. மேலே கண்ட விகுதிகளில் ஒன்றையும் ஏற்காமலும் வேறு யாதொரு மாறுபாடும் அடையாமலும் முதல் நிலை (பகுதி) மட்டும் நின்று பெயராகும் சொற்களே முதல் நிலைத் தொழிற் பெயர்களாம்.

அடி, அறை, பிடி, மிதி.

21. (3) முதல்நிலை திரிந்த தொழிற்பெயர் :—பகுதி திரிந்து தொழிற்பெயராவதுதான் முதல்நிலை திரிந்த தொழிற்பெயர்.

கெடு—கேடு, படு—பாடு, சுடு—சூடு; கொள்—கோள்

பயிற்சி ௩.

பின்வரும் சொற்றொடர்களிலுள்ள தொழிற்பெயர், வினையாலணையும் பெயர்களை எழுதுக:—

1. கல்வியில் சிறந்தவர் கச்சியப்பரே.
2. கற்றலைக் காட்டிலும் சிறந்தது கேள்வி.
3. இப்பாடுபட்டவன் எனக்குத் தெரிந்தவன்.
4. அடிமேல் அடிஅடித்தால் அம்மியும் நகரும்.
5. இங்கு வந்தவன் கேடு செய்யமாட்டான்.
6. வரவுக்குமேல் செலவு செய்கிறவன் வறியவன் ஆவான்.

## ௨. இடுகுறி, காரணம், காரணஇடுகுறி

22. தமிழில் வழங்கும் பெயர்கள் பொதுவாக (1) இடுகுறிப் பெயர் என்றும், (2) காரணப் பெயர் என்றும் இரண்டு வகையாம்.

இடுகுறி என்பது ஒரு காரணமும் இன்றி ஒரு பொருளைக் குறிப்பதற்கு இடப்பட்ட பெயரே. (2) யாதானும் ஒரு காரணத்தால் ஒரு பொருளுக்கு இடப்பட்ட பெயரே காரணப் பெயராம்.

23. மரம், கல் இவை ஒரு காரணமும் இல்லாமல் இடப்பெற்ற பெயர்கள். ஆதலின் இவை இடுகுறிப் பெயர்கள்.

கணக்கு எழுதுபவன் கணக்கன்; நான்கு கால்களை உடையது நாற்காலி; ஆதலின் கணக்கன், நாற்காலி இவை காரணப் பெயர்கள்.

24. இவற்றைப் பொது, சிறப்பு என இரண்டுவகையாகப் பிரிக்கலாம். பல பொருள்களுக்குப் பொதுவாக இருக்கும் பெயர் பொதுப் பெயர். மரம் என்பது பல பொருள்களுக்குப் பொதுவாக இருக்கிறது. மா மரம் என்பது ஒரு பொருளுக்கே சிறப்பாக இருக்கிறது.

(1) இடுகுறிப் பொது—மரம்.
(2) இடுகுறிச் சிறப்பு—மா, வேங்கை.
(3) காரணப் பொது—அணி (நகை).
(4) காரணச் சிறப்பு—முடி, வளை.

அணி யென்பது அணியப்படுவது. முடி யென்பது முடியிலணியும் அணி. அணி பொதுப் பெயர். முடி சிறப்புப் பெயர்.

25. சில பெயர்கள் காரணமாக இருந்தாலும் அவை காரணமில்லாமல் தனித்த ஒரு பொருளைமட்டுமே உணர்த்தும். முள்ளி என்பது முள்ளையுடையது என்ற காரணத்தால் ஏற்பட்டது. ஆனால் இது முள்ளை உடைய செடிகளை யெல்லாம் உணர்த்தாமல் முள்ளிச் செடி ஒன்றையே உணர்த்துகின்றது. அவ்வாறு உணர்த்துவதற்குக் காரணம் ஒன்றுமில்லை. இங்ஙனம் காரணத்தை நோக்குமிடத்துக் காரணமாகவும், "ஏன் அஃது ஒன்றைமட்டும் உணர்த்துகின்றது?" என்று வினவும்போது காரணமில்லாமல் இடுகுறியாகவும் இருக்கும் பெயர்கள் காரண இடுகுறிப் பெயர் என்று பெயர் பெறும். முக்கண்ணன் என்பது மூன்று கண்களையுடைய காரணத்தால் ஏற்பட்டிருந்தும் அது மூன்று கண்களையுடைய பிள்ளையார் முதலிய தெய்வங்களுக்கெல்லாம் ஏற்படாமல் சிவபிரானுக்குமட்டுமே இடுகுறியாக அமைந்த காரண இடுகுறிப் பெயர்.

பயிற்சி ச.

பின் வருவனவற்றுள் உள்ள பெயர்களை இடுகுறி, காரணம், காரண இடுகுறி என வகைப்படுத்தி எழுதுக:—

மரம், கல், கல்வி, கற்றவன், முருகன், புலவன், மண், பரவை, வீடு, வாசல், மூக்கன், வள்ளியம்மை, மாடு, கணக்கன், முக்கண்ணன், புளி, மலர், காது, வளையல், கண்ணன்,

## ௩. ஆகுபெயர்

26. ஒரு பொருளின் பெயர் அதற்குச் சம்பந்தப்பட்ட மற்றொரு பொருளுக்கு ஆகும்; சம்பந்தப்படாத பொருளுக்கு ஆகாது.

தாமரை முகம்—இங்கே தாமரை என்ற பொருளின் பெயர் அப்பொருள் முழுவதையும் உணர்த்தாமல் அதன்

உறுப்பாகிய மலரை உணர்த்துகிறது. இந்தப் பெயர் இவ்வாறு உணர்த்துவது பண்டைக்காலம் தொடங்கியாம். இவ்விதமாக ஒரு பொருளின் பெயர் அதற்குச் சம்பந்தப்பட்ட பிறிதொன்றுக்கு ஆகித் தொன்றுதொட்டு வழங்கி வருவது ஆகுபெயர் எனப் பெயர் பெறும். ஆகும் பெயர் ஆகுபெயர்.

27. ஆகுபெயர் பதினாறு வகைப்படும்.

(1) பொருளாகு பெயர் :—தாமரை முகம் — இதில் தாமரை என்ற பொருளின் பெயர் அதன் உறுப்பாகிய மலருக்கு ஆயிருக்கிறது.

(2) இட ஆகுபெயர் :—ஊர் அடங்கிற்று—இங்கே ஊர் என்பது இடத்தின் பெயர். இஃது அவ்விடத்தை உணர்த்தாமல் அவ்விடத்திலுள்ள மக்களுக்கு ஆயிருக்கிறது.

(3) கால ஆகுபெயர் :—கார் அறுத்தது—இங்கே கார் என்பது காலப்பெயர். இது காலத்தை உணர்த்தாமல் அக்காலத்தில் விளையும் பயிருக்கு ஆயிருக்கிறது.

(4) சினை ஆகுபெயர் :—வெற்றிலை நட்டான்—இதில் வெற்றிலை என்பது கொடியிலுள்ள உறுப்பின் பெயர். இஃது அவ் இலையை உணர்த்தாமல் அவ் இலையை யுடைய பொருளாகிய கொடிக்கு ஆயிருக்கிறது. (சினை—உறுப்பு)

(5) பண்பாகு பெயர் :—வெள்ளை உழுதது — இங்கே வெள்ளை என்பது பண்பை உணர்த்தாமல் அந்நிறத்தை யுடைய பொருளாகிய மாட்டுக்கு ஆயிருக்கிறது.

(6) தொழிலாகுபெயர் :—வற்றல் உண்டான் — இங்கே வற்றல் என்பது ‘அல்’ விகுதிபெற்ற தொழிற்பெயர். இஃது அத்தொழிலை உணர்த்தாமல் அத்தொழிலை உடைய (வற்றியிருக்கிற) பொருளுக்கு ஆயிருக்கிறது.

(7) எண்ணலளவை ஆகுபெயர் :—கால் கழுவினான்—இங்கே கால் என்பது எண்ணலளவைப் பெயர். இஃது அவ்வளவையை உணர்த்தாமல் அவ் அளவை உடைய உறுப்புக்கு ஆயிருக்கிறது.

(8) எடுத்தலளவை ஆகுபெயர் :—ஒரு பலம் கொடு—கடையில் "வெல்லம் எவ்வளவு வேண்டும்?" என்று கேட்ட கடைக்காரனது வினாவுக்கு "ஒரு பலம் கொடு" என்ற விடை கிடைக்கிறது. இங்கே பலம் என்பது எடுத்தலளவைப் பெயர். இஃது அவ் அளவை உணர்த்தாமல் அவ் அளவை உடைய பொருளாகிய வெல்லத்திற்கு ஆயிருக்கிறது.

(9) முகத்தலளவை ஆகுபெயர் :—நாழி கொடு—"எண்ணெய் எவ்வளவு வேண்டும்?" என்ற வினாவுக்கு "நாழி கொடு" என்ற விடை கிடைக்கிறது. இங்கே நாழி என்பது முகத்தலளவைப் பெயர். இஃது அவ் அளவையை உணர்த்தாமல் அவ் அளவையுடைய பொருளாகிய எண்ணெய்க்கு ஆயிருக்கிறது.

(10) நீட்டலளவை ஆகுபெயர் :—'ஒருமுழம்' கொடு—"துணி எவ்வளவு வேண்டும்?" என்ற வினாவுக்கு விடை "ஒரு முழம் கொடு" என்பது. இங்கே முழம் என்ற நீட்டலளவைப் பெயர் அவ் அளவையை உணர்த்தாமல் அந்த அளவையுடைய துணிக்கு ஆயிருக்கிறது.

(11) சொல்லாகுபெயர்:—சொல் உணர்ந்தான்—இங்கே சொல் என்பது சொல்லை உணர்த்தாமல் அச் சொல்லின் பொருளுக்கு ஆயிருக்கிறது.

(12) தானி ஆகுபெயர் :—விளக்கு ஒடிந்தது—இதில் விளக்கு என்பது இருளில் உள்ள பொருள்களை விளக்கிக் காட்டும் சுடர். இங்கே இஃது அச்சுடர் இருக்கும் இடமாகிய பொருளுக்கு ஆயிருக்கிறது.

(13) கருவி யாகுபெயர் :—திருவாசகம் படித்தான்—இதிலே திருவாசகம் என்ற கருவியின் பெயர் அவ்வாசகத்தை உணர்த்தாமல் அதனாலாகிய காரியமாகிய நூலுக்கு ஆயிருக்கிறது.

(14) காரிய வாகுபெயர் :—இலக்கணம் படித்தான்—இங்கே இலக்கணம் என்ற காரியத்தின் பெயர் அதனை உணர்த்தாமல் அதனை அறிவதற்குக் கருவியாக உள்ள நூலுக்கு ஆயிருக்கிறது.

(15) கருத்தா வாகுபெயர்:—திருவள்ளுவர் படித்தான்—இங்கே திருவள்ளுவர் என்னும் கருத்தாவின் பெயர் அக்கருத்தாவால் இயற்றப்பட்ட நூலாகிய திருக்குறளுக்கு ஆயிருக்கிறது.

(16) உவமை ஆகுபெயர் :—பாவை வந்தாள்—பாவை என்பது அழகுள்ள பொம்மையின் பெயர். இஃது அதைப் போலுள்ள பெண்களுக்கு உவமையாகச் சொல்லப்படும். ஆதலினால் பாவை என்பது உவமைப் பெயர். இது "பாவை வந்தாள்" என்ற இடத்து அவ் வுவமையாகிய பொம்மையை உணர்த்தாமல் அதற்கு உவமேயமாகிய பெண்ணுக்கு ஆயிருக்கிறது.

> ந. சூ.—பொருள்முதல் ஆறோடு, அளவை, சொல், தானி,
> கருவி, காரியம், கருத்தன் ஆதியுள்
> ஒன்றன் பெயரால் அதற்கு இயை பிறிதைத்
> தொன்முறை உரைப்பன ஆகுபெயரே." (உ)

## பயிற்சி ரு.

பின் வருவனவற்றிலுள்ள ஆகுபெயர்களை இன்னவகை என எழுதுக:—

1. செந்தாமரை போன்ற முகம் அழகாக இருக்கும்.
2. காளை வந்தான்; பாவையும் வந்தனள்.

3. வெள்ளை உழுதது; மயிலை படுத்தது.
4. மாமரத்திலிருந்து பச்சைஇலைகளும் வாடலும்உதிர்ந்தன.
5. வளையலில் இரண்டு வாங்கி வா.
6. தம்பீ! இன்று இலக்கணம் எடுத்து வா.
7. ஊரெல்லாம் கூடிற்று; நாடெல்லாம் மகிழ்ந்தது.
8. கொடிக்காலில் வெற்றிலை நடும் காலம் யாது?
9. கால் வலிக்க நடந்தான்; அரையில் ஆடை கட்டினன்.
10. நான் இன்று தாயுமானவர் படித்தேன்.

## ச. வழக்கு

28. உலக வழக்கு இரண்டு வகைப்படும்:—(1) இயல்பு வழக்கு, (2) தகுதி வழக்கு.

(1) இயல்பு வழக்கு இயல்பாக அனைவரும் பேசும் வழக்கு. அஃது (i) இலக்கண முடையது, (ii) இலக்கணப் போலி, (iii) மரூஉ என மூன்று வகைப்படும்.

(i) இலக்கண முடையது—இலக்கணப் பிழை யில்லா மல் வழங்குவது. இல்முன் நின்றான்.

(ii) இலக்கணப் போலி—இலக்கண முடையது போல வழங்குவது. முன்றிலில் நின்றான்.

(iii) மரூஉ—பேச்சில் சில சொற்கள் மருவி வரும். "அருமருந்தன்ன பிள்ளை" என்பது "அருமந்த பிள்ளை" என வழங்குகிறது.

(2) தகுதி வழக்கு என்பது சில சொற்களைச் சில காரணங்களால் வெளிப்படையாக வழங்க மாட்டாமல் இன்னதை இன்ன விதமாக வழங்குவது தகுதியெனப் பெரியோரால் அமைக்கப் பெற்று வழங்கி வருவது. இதுவும் மூன்று வகையாம்.

(i) இடக்கரடக்கல்—இடக்கான சொற்களை அடக்குதல். "பீ," என்பது "பவ்வீ" எனவும், "மலங் கழுவினான்" என்பது "கால் கழுவினான்" எனவும் வழங்கும்.

(ii) மங்கலம்—மங்கள மல்லாதவற்றை மங்களமாக வழங்குவது. "தாலி அறுந்தது" என்பது "தாலி பெருகிற்று" எனப்படுகிறது.

(iii) குழூஉக்குறி—ஒரு கூட்டத்தார் தங்களுக்குள்ளே ஒரு பொருட்கு வழங்கும் பெயர். தட்டார்கள் பொன்னைப் பறி யென்பர்.

## ரு. ஆண்பால்—பெண்பால்

29. ஆண்பாலைப் பெண்பாலாக்குவதற்குப் பலவழிகள் இருக்கின்றன. அவை பின் வருவன :—

| | ஆண்பால் | பெண்பால் |
|---|---|---|
| (1) | அன் | அள் |
| | அவன் | அவள் |
| | எவன் | எவள் |
| | நல்லவன் | நல்லவள் |
| (2) | அன் | இ |
| | அரசன் | அரசி |
| | கூனன் | கூனி |
| | பாட்டன் | பாட்டி |
| (3) | அன் | ச்சி |
| | கணக்கன் | கணக்கச்சி |
| | புலையன் | புலைச்சி |
| | வலையன் | வலைச்சி |

| | | |
|---|---|---|
| (4) | அன் | த்தி |
| | குறவன் | குறத்தி |
| | தச்சன் | தச்சத்தி |
| | மறவன் | மறத்தி |
| (5) | ஆன் | ஆள் |
| | ஊரான் | ஊராள் |
| | மதுரையான் | மதுரையாள் |
| | நாட்டான் | நாட்டாள் |
| (6) | ஆன் | ஆத்தி |
| | வண்ணான் | வண்ணாத்தி |
| | கன்னான் | கன்னாத்தி |
| | தட்டான் | தட்டாத்தி |
| (7) | காரன் | காரி |
| | வீட்டுக்காரன் | வீட்டுக்காரி |
| | வேலைக்காரன் | வேலைக்காரி |
| | கூலிக்காரன் | கூலிக்காரி |
| (8) | பல விதமாக ஆவது | |
| | கணவன் | மனைவி |
| | தந்தை | தாய் |
| | தம்பி | தங்கை |
| | அண்ணன் | அக்காள் |
| | அப்பன் | அம்மை |

பயிற்சி கூ.

பின் வருகின்ற ஆண்பாற் பெயர்களைப் பெண்பாலாகவும், பெண்பாற் பெயர்களை ஆண்பாலாகவும் மாற்றி எழுதுக:

அழகன், குருடன், தலைவி, மாணக்கன், ஒருத்தி, தமிழன், கன்னாத்தி, பிடாரன், தங்கை, பணக்காரன், செல்வன், நல்லாள், அக்காள், மதுரையான், வண்ணான், அரசி.

## சா. ஒருமை, பன்மை.

30. ஒருமையைப் பின்வருமாறு பன்மையாக்கலாம்—

1. பெரும்பாலும் ஒருமையோடு "கள்" சேர்ப்பதால் ஒருமை பன்மையாகும்.

| | | | |
|---|---|---|---|
| நாய் | —நாய்கள் | எழுத்து | —எழுத்துக்கள் |
| வண்டு | —வண்டுகள் | முத்து | —முத்துக்கள் |
| பூ | —பூக்கள் | மரம் | —மரங்கள் |
| புரு | —புருக்கள் | பல் | —பற்கள் |
| தெரு | —தெருக்கள் | நாள் | —நாட்கள் |

2. சிறுபான்மை ஒருமையோடு "மார்" சேர்ப்பதால் ஒருமை பன்மையாகும்.

தோழி — தோழிமார்
மந்திரி — மந்திரிமார்

3. ஆண்பால் விகுதி "அன்" என்பதும், பெண்பால் விகுதி "அள்" என்பதும் பன்மையில் "அர்" என மாறும்.

நல்லவன், நல்லவள் } நல்லவர்
அவன், அவள் } அவர்
எவன், எவள் } எவர்

23 MAR 1

4. ஆண்பால் விகுதி "ஆன்" என்பதும், பெண்பால் விகுதி "ஆள்" என்பதும் பன்மையில் "ஆர்" என மாறும்.

வீட்டான், வீட்டாள் } வீட்டார்

5. ஒன்றன்பால் விகுதி 'து' என்பது பன்மையில் "வை" ஆக மாறும்.

அது—அவை. நல்லது—நல்லவை.
பெரியது—பெரியவை.

### பயிற்சி எ.

பின் வருகின்ற சொற்களில் ஒருமையைப் பன்மையாகவும், பன்மையை ஒருமையாகவும் மாற்றுக:—

வேர், மாக்கள், கனு, அணு, கொசு, கணுக்கள், கொத்து, நாற்றுக்கள், பாடம், பாங்கிமார், வாட்கள், கெட்டவர், காட்டான், எவை, அவன், பெரியார், அது, நான், கிணறு, குளம்

## எ. மரியாதைப் பன்மை

31. ஒருமையாக இருந்தாலும் மரியாதையைக் காட்டுவதற்காக "ஆர்" என்பதை ஒருமையோடு சேர்த்துச் சொல்வது உண்டு.

ஔவை—ஔவையார். செட்டி—செட்டியார்.
மாமன்—மாமனார். பாட்டி—பாட்டியார்.
தாய்—தாயார்.

முதல் வேற்றுமைக் கருத்தாவிற்கும் மூன்றும் வேற்றுமைக் கருத்தாவிற்கும் உள்ள வேறுபாடு:—

முதல்வேற்றுமை:—அரசன் கோவிலைக் கட்டினான்.

மூன்றும் வேற்றுமை:—அரசனால் கோவில் கட்டப்பட்டது.

மேலேகண்ட உதாரணங்களை ஆராய்ந்தால் பின்வரும் வேறுபாடுகள் தெரிகின்றன:—

1. கருத்தாவாகிய அரசன் முதல் வேற்றுமையிலிருக்கிறபோது செயப்படு பொருளாகிய கோவில் இரண்டாம் வேற்றுமையிலிருக்கிறது. கருத்தா மூன்றும் வேற்றுமையிலிருக்கிறபொழுது செயப்படுபொருள் முதல் வேற்றுமையிலிருக்கிறது.

2. கருத்தா முதல் வேற்றுமையில் இருக்கிறபொழுது பயனிலை செய்வினையாக இருக்கிறது. கருத்தா மூன்றும் வேற்றுமையானபோது பயனிலை செயப்பாட்டு வினையாக மாறுகிறது..

### பயிற்சி அ.

பின் வருவனவற்றிலுள்ள முதல் வேற்றுமைக் கருத்தாவை மூன்றும் வேற்றுமையாகவும், மூன்றும் வேற்றுமைக் கருத்தாவை முதல் வேற்றுமையாகவும் மாற்றுக :—

1. கண்ணன் பட்டத்தைப் பறக்க விட்டான்.
2. இவ்வீடு என்னால் கட்டப்பட்டது.
3. கந்தன் சேனையை வென்றான்.
4. நீ மாட்டைக் குளிப்பாட்டினாயா ?
5. அவன் பாடத்தைப் படித்தான்.
6. மாடு அவனால் அடிக்கப்பட்டது.
7. மோதிரம் தட்டானால் செய்யப்பட்டது.
8. முகம்மதுநபி மகம்மதிய மதத்தை ஏற்படுத்தினார்.
9. இயேசுநாதர் நன்மதியை உரைத்தார்.
10. திருவாசகம் மாணிக்கவாசகராற் பாடப்பட்டது.

## அ. உருபு மயக்கம்

32. வேற்றுமை உருபு ஒன்றாக இருக்க அதன்பொருள் வேறொரு வேற்றுமை உருபின் பொருளைக்கொண்டிருக்கும். இவ்வகையாக வரும் இடங்களில் உருபைப் பார்த்து மயக்கமுண்டாகிறது. இதுதான் உருபு மயக்கம் என்றும், வேற்றுமை மயக்கம் என்றும் சொல்லப்படுகிறது. வேற்றுமையில் மாறுபடுவது பொருளே. ஆதலின் உருபைப் பார்த்து மயங்காமல் பொருளைப் பார்த்தே இன்ன வேற்றுமை என்று சொல்ல வேண்டும்.

“மன்னனை மாலை சூட்டினாள்” என்பதில் ஐ உருபைக் கண்டு, ‘இரண்டாம் வேற்றுமையோ?’ என மயக்கம் உண்டா

கிறது. உண்மையில் இஃது இரண்டாம் வேற்றுமை அன்று ; 'இதற்கு இஃது' என்னும் நான்காம் வேற்றுமையே. இதன் சரியான நிலை, "மன்னனுக்கு மாலை சூட்டினாள்" என்பது.

> ந. சூ.—யாதன் உருபிற் கூறிற் றாயினும்
> பொருள்சேல் மருங்கில் வேற்றுமை சாரும்." (ரு)

## கூ. விளியடையாப் பெயர்கள்

33. (1) *சுட்டுப்பெயர்களும்,* (2) *வினாப்பெயர்களும்,* (3) *தன்மைப் பெயர்களும்,* (4) *முன்னிலைப் பெயர்களும்,* (5) *பொதுப்பெயர்களும்,* (6) *இவை போல்வன சிலவும் விளி யடையமாட்டா.*

சுட்டுப்பெயர் :—

(1) *அவன்—அவள்—அவர்—அது—அவை*
*இவன்—இவள்—இவர்—இது—இவை*

(2) வினாப் பெயர் :—
*எவன்—எவள்—எவர்—எது—எவை*
*யாவன்—யாவள்—யாவர்—யாது—யாவை.*

(3) தன்மைப்பெயர் :—
*நான், நாம், யாம், நாங்கள், யாங்கள்*

(4) முன்னிலைப்பெயர் :—
*நீ, நீர், நீங்கள்*

(5) பொதுப்பெயர் :—
*தான், தாம், தாங்கள்*

(6) பிற பெயர்கள் :—
*பிறன், பிறள், பிறர், பிற ; மற்றவன், மற்றவள், மற்றவர், மற்றது, மற்றவை ; பலர், சிலர், பல, சில, எல்லாம், அனைவர்.*

## ம. உருபு ஏற்கும்போது திரியும் பெயர்கள்

34. யான், யாம், நாம், நீ, நீர், தான், தாம் என்ற ஏழு பெயர்களும் வேற்றுமை உருபு சேரும்போது திரியும்.

| வேற்றுமை | | யான், என் | யாம், எம் | நாம், நம் | நீ, உன், நின் |
|---|---|---|---|---|---|
| முதல் வேற்றுமை | | யான் | யாம் | நாம் | நீ |
| இரண்டாம் | ,, | என்னை | எம்மை | நம்மை | உன்னை, நின்னை |
| மூன்றும் | ,, | என்னால் | எம்மால் | நம்மால் | உன்னால், நின்னால் |
| நான்காம் | ,, | எனக்கு | எமக்கு | நமக்கு | உனக்கு, நினக்கு |
| ஐந்தாம் | ,, | என்னின் | எம்மின் | நம்மின் | உன்னின், நின்னின் |
| ஆறும் | ,, | எனது | எமது | நமது | உனது, நினது |
| ஏழாம் | ,, | என்னிடம் | எம்மிடம் | நம்மிடம் | உன்னிடம், நின்னிடம் |
| எட்டாம் | ,, | ... | ... | ... | ... |

| | | | |
|---|---|---|---|
| வேற்றுமை | நீர், உம், நம் | தான், தன் | தாம், தம் |
| முதல் வேற்றுமை | நீர் | தான் | தாம் |
| இரண்டாம் ,, | உம்மை, நம்மை | தன்னை | தம்மை |
| மூன்றாம் ,, | உம்மால், நம்மால் | தன்னால் | தம்மால் |
| நான்காம் ,, | உமக்கு, நமக்கு | தனக்கு | தமக்கு |
| ஐந்தாம் ,, | உம்மின், நம்மின் | தன்னின் | தம்மின் |
| ஆறாம் ,, | உமது, நமது | தனது | தமது |
| ஏழாம் ,, | உம்மிடம், நம்மிடம் | தன்னிடம் | தம்மிடம் |
| எட்டாம் ,, | ... | ... | ... |

## உ. வினைச்சொல்

### க. வினைமுற்றின் பிரிவுகள்

வினைமுற்றில்,

(1) செயப்படுபொருள் குன்றாவினையா? செயப்படு பொருள் குன்றிய வினையா?
(2) செய்வினையா? செயப்பாட்டுவினையா?
(3) உடன்பாடா? எதிர்மறையா?
(4) ஏவலா? வியங்கோளா?
(5) 'தன்வினையா? பிறவினையா?

என்ற பாகுபாடுகளைத் தெரிந்துகொள்ளல் வேண்டும்.

## உ. செய்வினை, செயப்பாட்டு வினை

35. எழுவாய் செய்யும் தொழிலை நேரே உணர்த்தும் வினை செய்வினை எனப் பெயர்பெறும்.

நான் பண்டத்தைத் தின்றேன்.

36. எழுவாயின் தொழிலைச் செயப்படு பொருள் அடைவதை உணர்த்தும் வினையே செயப்பாட்டு வினையாம்.

பண்டம் என்னால் தின்னப்பட்டது.

37. செய்வினையைச் செயப்பாட்டு வினையாக மாற்றும் வழிகள்:—அவ்வழிகள் மூன்று.

(1) செய்வினைப் பகுதியோடு அகரச் சாரியையும் படு என்பதையும் சேர்ப்பது.

செய்—செய்யப்படு. வெல்—வெல்லப்படு.

செய்வினை—நான் உணவைத் தின்றேன்.

செயப்பாட்டுவினை—உணவு என்னால் தின்னப்பட்டது.

(2) செய்வினைப் பகுதியோடு அகரச் சாரியையும் பெறு என்பதையும் சேர்ப்பது.

செய்—செய்யப்பெறு. வெல்—வெல்லப்பெறு.

செய்வினை—பசு புல்லை மேய்ந்தது.

செயப்பாட்டுவினை—புல் பசுவால் மேயப்பெற்றது.

(3) செய்வினைப்பகுதியோடு உண்என்பதைச்சேர்ப்பது.

மோது—மோதுண். அடி—அடியுண்.

செய்வினை—நான் அவனை மோதினேன்.

செயப்பாட்டுவினை—அவன் என்னால் மோதுண்டான்.

செயப்படுபொருள் குன்றாவினைகளே செயப்பாட்டுவினைகளாக மாறும். செயப்படுபொருள் குன்றிய வினைகளுக்குச்

செயப்பாட்டுவினை கிடையாது. செய்வினைக் கருத்தா முதல் வேற்றுமையாக இருக்கும்; செயப்பாட்டுவினைக் கருத்தா மூன்றும் வேற்றுமையாக இருக்கும்.

பயிற்சி சு.

பின் வரும் சொற்றொடர்களில் செய்வினையைச் செயப்பாட்டு வினையாகவும், செயப்பாட்டு வினையைச் செய்வினை யாகவும் மாற்றுக :—

1. நான் கல்வி கற்றேன்.
2. மாம்பழத்தைத் திருடியவன் யார் ?
3. பாண்டியனால் கொலையுண்டான்.
4. சேரமன்னர் கண்ணகியைக் கண்டார்.
5. வட ஆரியமன்னர் சேரமன்னரால் வெல்லப் பெற்றனர்.
6. இவ்வீடு என்னால் விரும்பப் பட்டது.
7. பசு பாலைக் கொடுத்தது.
8. மருந்தால் நோய் மாற்றப்பெற்றது.
9. கரிகாலன் புகழைப் பெற்றான்.

## ரு. உடன்பாடு, எதிர்மறை

38. செயலின் நிகழ்ச்சியோடு உடன்படுவது உடன் பாட்டுவினை.

உண்டான், கற்றான்.

39. தொழிலின் நிகழ்ச்சியை எதிர்மறுப்பது எதிர் மறைவினை.

உண்ணான், கற்றிலன்.

40. உடன்பாட்டுடன் இல், அல், ஆ என்ற விகுதி களைச் சேர்ப்பதால் உடன்பாடு எதிர்மறையாகும்.

| உடன்பாடு | எதிர்மறை | விகுதி |
|---|---|---|
| உண்டாள் | —உண்டிலன் | —இல் |
| உண்டான் | —உண்ணான் | —ஆ |
| உண் | —உண்ணல் | —அல் |
| | (உண்ணற்க) | |

41. இல் விகுதி இறந்தகால நிகழ்கால இடைநிலைக ளோடு கூடிவரும். அல், ஆ என்பன இடைநிலைகளோடு கூடாமல் தாமே பெரும்பாலும் எதிர்காலத்தை யுணர்த்தி வரும்.

பயிற்சி ம.

பின் வருகின்ற வினைப்பகுதிகளைக் கொண்டு உடன் பாடாகவும் எதிர்மறையாகவும் வினைமுற்றுக்கள் அமைத் துக் காட்டுக :—

செய், தின், படி, இரு, கேள், நில், கொல், உண், பாடு, விடு.

## ச. ஏவல், வியங்கோள்

42. கட்டளைப் பொருளில் வரும் வினையே ஏவல் வினையாம்; இது முன்னிலை யிடத்திற்கே உரியது.

| | ஏவல் ஒருமை | ஏவற் பன்மை |
|---|---|---|
| உடன்பாடு | —உண், செய். | உண்மின், உண்ணுங்கள். செய்வீர், செய்யுங்கள். |
| எதிர்மறை | —உண்ணாதே, | உண்ணாதீர், உண்ணன்மின். |
| | செய்யாதே, | செய்யாதீர், செய்யன்மின். |

43. வியங்கோளும் ஏவலே; ஆனால் இது மரியாதைக் குறிப்போடு பெரும்பாலும் வாழ்த்துதல், வேண்டுதல் முத லிய பொருள்களை உணர்த்தி க, ய, ர், இ; அ முதலிய விகுதி கள் பெற்று ஐம்பால் மூவிடங்கட்கும் பொதுவாக வரும்.

அவன், அவள், அவர்
அது, அவை
நீ, நீர், நீங்கள்
யான், யாம், யாங்கள்
} வாழ்க, வாழிய, வாழியர், வாழி, வாழ

44. ஏவலுக்கும் வியங்கோளுக்கும் உள்ள வேறுபாடுகள்:—

| ஏவல் | வியங்கோள் |
| --- | --- |
| 1. கட்டளைப் பொருளில் மட்டும் வரும் | 1. வேண்டுதல், வாழ்த்துதல் முதலிய பல பொருள்களில் வரும். |
| 2. முன்னிலையில் மட்டும் வரும். | 2. ஐம்பால் மூவிடங்களிலும் வரும். |

## ரு. தன்வினை, பிறவினை

45. கருத்தா தானே செய்யும் செயலைக் குறிப்பது தன்வினையாம்.

கண்டான், இணங்கினான், உருகினான்.

46. கருத்தா பிறரைச் செய்விக்கிற செயலை உணர்த்துவது பிறவினையாம்.

காண்பித்தான், இணக்கினான், உருக்கினான்.

47. தன்வினை பிறவினையாவதற்கு மூன்று வழிகள் உண்டு.

(1) பி, வி, கு, சு, டு, து, பு, று என்ற விகுதிகளைச் சேர்ப்பதால் தன்வினை பிறவினையாம்.

கல்—கற்பி
செய்—செய்வி
ஆ—ஆக்கு
காய்—காய்ச்சு
புரள்—புரட்டு
நட—நடத்து
பர—பரப்பு
சுழல்—சுழற்று

(2) தன்வினையிலுள்ள மெல்லொற்றை வல்லொற்றாக் குவதால் தன்வினை பிறவினையாம்.

அடங்கு-அடக்கு, திருந்து-திருத்து, எழும்பு-எழுப்பு.

(2) தன்வினையிலுள்ள வல்லொற்றை இரட்டுவதால் தன்வினை பிறவினையாம்.

உருகு-உருக்கு, ஆறு-ஆற்று.

### பயிற்சி கக.

பின் வருவனவற்றின் தன்வினையைப் பிறவினையாகவும் பிறவினையைத் தன்வினையாகவும் மாற்றுக.

அறி, ஊட்டு, தா, நீள், பூட்டு, அகற்று, கால், தோல், காண்பி, இரு, மடக்கு, குழம்பு, இறக்கு, விலகு, வாட்டு, படு, படிப்பி, விளக்கு, மாற்று.

## கரு. முற்றெச்சம்

48. "நான் இங்கே வந்தேன் பாடினேன்," என்ற சொற்றொடரில் வந்தேன் என்பது வினைமுற்று. ஆனால் அது வந்து என்ற வினையெச்சப் பொருளையே உடையது. ஆதலின் வந்தேன் என்பது முற்றாக இருந்தாலும் இங்கே எச்சமே. இவ்வாறு வினைமுற்று எச்சமாக வருவது முற்றெச்சம் என்று சொல்லப்படும்.

## ௬. இடைச்சொல்

அசைநிலை :—

49. ஒரு பொருளையும் குறித்து வாராதது அசைநிலை எனப்படும்.

குறிப்பு :—

50. குறிப்பு (1) மகிழ்ச்சிக் குறிப்பு, (2) துன்பக் குறிப்பு, (3) இகழ்ச்சிக் குறிப்பு, (4) ஐயக் குறிப்பு,

(5) விரைவுக் குறிப்பு, (6) வியப்புக் குறிப்பு எனப் பல வகைப்படும்.

(1) மகிழ்ச்சிக் குறிப்பு—ஆ, ஆ! ஓகோ!
(2) துன்பக் குறிப்பு—ஐயோ! அந்தோ!
(3) இகழ்ச்சிக் குறிப்பு—து! சி! சிச்சி! தூ!
(4) ஐயக் குறிப்பு—ஓ!
(5) விரைவுக் குறிப்பு—சரேலென, பளிச்சென, திடுதிடென.
(6) வியப்புக் குறிப்பு—ஆகா! அம்மம்மா!

**51.** பலபொருள்களைக் குறித்துவரும் இடைச்சொற்கள்: அவை மற்று, உம், ஏ, ஓ முதலியன.

"மற்று"

**52.** மற்று (1) வேறு என்னும் பொருளினும், (2) அசைநிலையாகவும் வரும்.

(1) மற்று ஓர் அணிகலம் வேண்டாவாம்.
(2) மற்று யான் கண்டேன்.

"உம்"

**53.** உம் என்பது (1) உயர்வுசிறப்பு, (2) இழிவு சிறப்பு, (3) ஐயம், (4) எண் முதலிய பலபொருள்களில் வரும்.

(1) அரசனும் பொய் புகன்றான்—உயர்வு சிறப்பு.
(உயர்ந்தாரைக் குறிப்பது உயர்வு சிறப்பு)
(2) கள்ளனும் பொய் புகலான்— இழிவுசிறப்பு.
(இழிந்தார்மேல் நிற்பது இழிவு சிறப்பு)
(3) அவன் நாட்டை அடையினும் அடையும்—ஐயம்.
(4) அவனும் இவனும் வந்தார்கள்—எண்.

"ஏகாரம்"

54. ஏகாரம் (1) பிரிநிலை, (2) எண், (3) ஈற்றசை, (4) தேற்றம் முதலிய பொருள்களில் வரும்.

(1) முருகனே வென்றான்—பிரிநிலை
(ஒருவரைப் பலரினின்றும் பிரித்துக் காட்டுவது)
(2) நிலனே நீரே தீயே—எண்
(3) மொழிந்தனனே—ஈற்றசை
(4) நீயே வென்றாய்—தேற்றம்
(தேற்றம்—தெளிவு)

"ஓகாரம்"

55. ஓகாரம் (1) ஒழியிசை, (2) வினா, (3) உயர்வு சிறப்பு, (4) இழிவு சிறப்பு, (5) அசைநிலை, (6) ஐயம் முதலிய பல பொருள்களில் வரும்.

(1) உண்ணுதற்கோ வந்தான்—ஒழியிசை
(உண்ண வரவில்லை, வேறு கருத்தால் வந்தான் எனக் காட்டுகிறது.)
(2) வேலனோ வென்றான் —வினா
(3) ஓ ஓ நல்லன் —உயர்வு சிறப்பு
(4) ஓ ஓ தீயன் —இழிவு சிறப்பு
(5) அறிஞரே தெளிமினோ—அசைநிலை
(6) தூணோ மனிதனோ —ஐயம்

பயிற்சி கஉ.

பின் வருவனவற்றுள் மற்று, உம், ஏ, ஓ இவை குறிக்கும் பொருளை விவரமாக எழுதுக: —

1: திருமகளும் நாணுகின்ற அழகுடையாள்.
2. மற்றோர் உணவும் உளதோ ?

3. அண்ணனும் தம்பியும் அம்மையும் வந்தனர்.
4. மானோ, பசுவோ? போய்ப் பார்.
5. ஓ, ஓ வென்றான், அவனே பெரியன்.
6. படிப்பதற்கோ வந்தாய்?
7. நாயும் விரும்பாத புலாலை உண்டான்.
8. நாட்டையும் நகரையும் பெற்று வாழ்ந்தனனே.
9. நண்பரீர்! இவ்விந்தையைக் காண்மினோ.
10. முருகனே போரில் வெற்றியைப் பெற்றான்.

## ச. உரிச்சொல்

ஒரு பொருளை உணர்த்தும் பல உரிச்சொற்கள்:—

56. சால, உறு, தவ, நனி, கூர், கழி என்னும் ஆறும் மிகுதி என்னும் குறிப்பை உணர்த்தும்.

| | |
|---|---|
| சாலப் பேசினன் | நனி பேதை |
| உறு புகழ் | துன்புகூர் நெஞ்சம் |
| தவப் பல | கழி நலம் |

பல பொருள்களை உணர்த்தும் ஓர் உரிச்சொல்:—

57. காவல், கூர்மை, மணம், ஒளி, அச்சம், ஒலி என்னும் ஆறு பொருள்களில் கடி என்னும் சொல் வரும்.

1. காவல் — கடி நகர்
2. கூர்மை — கடி வேல்
3. மணம் — கடி மலர்
4. ஒளி — கடி மார்பன்
5. அச்சம் — கடிப் படை
6. ஒலி — கடி முரசு

# ௯. சொற்றொடர் இலக்கணம்

## தொடர்

58. தொடர் (1) தொகைநிலைத் தொடர் என்றும், (2) தொகாநிலைத் தொடர் என்றும் இரண்டு வகைப்படும்.

## க. தொகைநிலைத் தொடர்

59. தொக்கு நிற்பது தொகை. தொகைநிலைத் தொடர் (1) வேற்றுமைத்தொகை, (2) வினைத்தொகை, (3) பண்புத் தொகை, (4) உவமைத்தொகை, (5) உம்மைத்தொகை, (6) அன்மொழித்தொகை என ஆறு வகைப்படும்.

(1) வேற்றுமைத்தொகை :—வேற்றுமை உருபு தொக்கு நிற்பது. நான் யானை வாங்கினேன். யானை என்பதில் ஐ உருபு தொக்கு நிற்கிறது. இஃது இரண்டாம் வேற்றுமைத் தொகை.

(2) வினைத்தொகை:—காலத்தைக் காட்டும் இடைநிலையும் பெயரெச்ச விகுதியும் இல்லாமல் வரும் பெயரெச்சமே வினைத்தொகை.

செய்தொழில், செய் என்பதில் செய்த, செய்கிற, செய்யும் என்பவற்றிலுள்ள காலங்காட்டும் இடைநிலையும் பெயரெச்ச விகுதியும் இல்லை.

(3) பண்புத்தொகை :—பண்புருபு தொக்கு நிற்பது. கருங்கண் - கருமையாகிய கண். ஆகிய என்பது பண்புருபு. சாரைப்பாம்பு - இருபெயரொட்டுப் பண்புத்தொகை.

(4) உவமைத்தொகை:—உவமைஉருபு தொக்குநிற்பது.

மலர்க்கண் - மலர் போன்ற கண். போன்ற என்பது உவமை உருபு.

(5) உம்மைத்தொகை:—'உம்' என்பது தொக்கு நிற்பது. வெற்றிலைபாக்குத் தா - வெற்றிலையும் பாக்கும் தா.

(6) அன்மொழித்தொகை:—மேலேகண்ட ஐந்துவகைத் தொகைகளினின்றும் பிறப்பதோடு அவை குறிக்காத வேறு பொருளை உணர்த்துவது அன்மொழித் தொகையாம். அல் + மொழி = அன்மொழி.

பூக்குழல் வந்தாள்—பூக்குழல் என்பது பூவையுடைய குழல் என விரியும். ஆதலின் இஃது இரண்டாம் வேற்றுமைத் தொகை. ஆனால் இங்கே இது குழலை உணர்த்தாமல் குழலை யுடைய பெண்ணை உணர்த்துகிறது. இவ்வாறு உணர்த்துவன எல்லாம் அன்மொழித்தொகையே.

## தொகை ஆறு

ந. சூ.—"வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை,
அன்மொழி என அத்தொகை ஆறு ஆகும்" (ச)

### க. வேற்றுமைத் தொகை

ந. சூ.—"இரண்டு முதலாம் இடை ஆறு உருபும்
வெளிப்படல் இல்லது வேற்றுமைத்தொகையே." (ரு)

### உ. வினைத்தொகை

ந. சூ.—"காலம் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை." (சு)

### ங. பண்புத்தொகை

ந. சூ.—"பண்பை விளக்கும் மொழிதொக் கனவும்
ஒரு பொருட்கு இருபெயர் வந்தவும் குணத்தொகை." (எ)

### ச. உவமைத்தொகை

ந. சூ.—"உவம உருபு இலது உவமத் தொகையே." (அ)

### ரு. உம்மைத்தொகை

ந. சூ.—"எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல்
எனுநான்கு அளவையுள் உம்இலது அத்தொகை." (கூ)

கூ. அன்மொழித் தொகை

ந. சூ.—"ஐந்தொகை மொழிமேல் பிறதொகல் அன்மொழி" (ம)

## உ. தொகாநிலைத் தொடர்

60. இடையே வேற்றுமை உருபு முதலிய உருபுகள் கெடாமலும், ஒரு சொல் தன்மைப் படாமலும் சொற்கள் பிளவுபடத் தொடர்ந்திருப்பது தொகாநிலைத் தொடராம்.

(1) வினைமுற்றுத் தொடர்—வந்தான் அவன்-தெரிநிலை
நல்லன் அவன்-குறிப்பு
(2) பெயரெச்சத் தொடர்—வந்த பையன்-தெரிநிலை
நல்ல பையன்-குறிப்பு
(3) வினையெச்சத்தொடர்—உண்டு வந்தான்-தெரிநிலை
உழுதன்றி உண்ணான்-குறிப்பு
(4) எழுவாய்த்தொடர் —கொற்றன் வந்தான்
(5) விளித்தொடர் —கொற்றா! வா
(6) வேற்றுமைத்தொடர்—குடத்தை வனைந்தான்
(7) இடைச்சொற்றொடர்—இனி வா
(8) உரிச்சொற்றொடர் —நனி பெரியன்
(9) அடுக்குத்தொடர் —தீ, தீ.

23 MAR 198

பயிற்சி கரு.

பின் வருவனவற்றுள் தொகைநிலை, தொகாநிலைத் தொடர்களை இன்னவகை என எழுதுக:—

1. வந்தான் இராமன்; பைந்தொடி கண்டாள்.
2. பைந்தொடியே! வா; மலர்க்கண்ணீர் போக்கு.
3. நெடுந்தூரம் நடந்தேன்; கால் கை தளர்ந்தன.
4. கொல் யானையை வெல்வீரன் யாவன்?
5. பெரியமனிதன் வந்தான்; நன்மதி எனக்குச் சொன்னான்.

6. யான் நின்று பார்த்தேன்; தந்தை வரவு காணேன்.
7. அண்ணா! என் பணத்தைத் தாரும்.
8. அவன் என் இன்சொல் கேட்டான்; மதிமுகம் மலர்ந்தது.
9. தீ, தீ! வந்து பார்; தண்ணீர் கொண்டுவா.
10. தாயே! வணங்கினேன்; மலரடி பணிந்தேன்.

# ச. சந்தி இலக்கணம்

## க. எகர வினாவும் முச்சுட்டும்

61. எகர வினாவுக்கும், அகர இகர உகரங்களுக்கும் முன்னால் உயிரெழுத்துக்களும் யகரமும் வந்தால் வகரம் தோன்றும்; பிற மெய் எழுத்துக்கள் வந்தால் அம் மெய்களே மிகும். பாட்டுக்களில் சுட்டெழுத்து நீண்டால் யகரம் தோன்றும்.

எ + அணி = எவ்வணி
எ + யானை = எவ்யானை
அ + அணி = அவ்வணி
அ + யானை = அவ்யானை
இ + அணி = இவ்வணி
இவ்யானை, உவ்வணி, உவ்யானை
எ + படை = எப்படை; அ + சேனை = அச்சேனை
அ + இடை = ஆயிடை (சுட்டு நீண்டது)

ந. சூ.—“எகர வினாமுச் சுட்டின் முன்னர்
உயிரும் யகரமும் எய்தின் வவ்வும்,
பிறவரின் அவையும்; தூக்கில் சுட்டு
நீளின் யகரமும் தோன்றுதல் நெறியே.” (கக)

## உ. பூ என்ற சொல்

62. பூ என்ற சொல்லின்முன் க, ச, த, ப வந்தால் அவை மிகுதலோடு, அவற்றிற்கு இனமான மெல்லொற்றும் மிகும்.

பூ + கொடி = பூக்கொடி, பூங்கொடி
பூ + சோலை = பூச்சோலை, பூஞ்சோலை
பூ + தடம் = பூத்தடம், பூந்தடம்
பூ + பணை = பூப்பணை, பூம்பணை.

ந. சூ—"பூப்பெயர் முன்இன மென்மையும் தோன்றும்" (சஉ)

## ந. தனிக்குறிலோடு கூடிய மெய்

63. தனிக்குறிலோடு கூடிவரும் மெய்க்கு முன் உயிர் வந்தால் அவ்வொற்று இரட்டிக்கும்.

மண் என்பதில் ண் தனிக்குறிலாகிய மகரத்தோடு வந்திருக்கிறது.

மண் + அரிது = மண்ணரிது
பொன் + ஒளி = பொன்னொளி

ந. சூ.—"தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்" (கக)

## ச. லகர, ளகர ஈறு

64. லகர ளகரங்களுக்கு முன் வல்லினம் வந்தால் வேற்றுமையில் லகரம் றகரமாகவும், ளகரம் டகரமாகவும் திரியும்; அல்வழிப் புணர்ச்சியில் இயல்பாகவும் ஆகும். திரிந்தாலும் திரியும்.

வல்லினம்

கல் + குறை = கற்குறை } வேற்றுமை
முள் + குறை = முட்குறை }

கல் + குறிது = கல்குறிது, கற்குறிது } வேற்றுமை
முள் + குறிது = முள்குறிது, முட்குறிது } அல்லாதவழி

லகர ளகரங்களுக்கு முன் மெல்லினம் வந்தால் வேற்றுமைப் புணர்ச்சியானாலும் அல்வழிப் புணர்ச்சியானாலும் லகரம் னகரமாகவும், ளகரம் ணகரமாகவும் மாறும். இடையினம் வந்தால் இயல்பாம்.

| | | |
|---|---|---|
| கல் + ஞெரிந்தது = கன்ஞெரிந்தது<br>முள் + ஞெரிந்தது = முண்ஞெரிந்தது | } | அல்வழி |
| கல் + ஞெரி = கன்ஞெரி<br>முள் + ஞெரி = முண்ஞெரி | } | வேற்றுமை |

இடையினம்

கல் + யாது = கல் யாது

முள் + யாது = முள் யாது

ந. சூ.—"ல, ளவேற் றுமையில் ற, டவும், அல்வழி
அவற்றோடு உறழ்வும் வலிவரின் ஆம்; மேலி
மேவின் ன, ணவும்; இடைவரின் இயல்பும்
ஆதம் இருவழி யானும் என்ப." (கச)

65. தனிக்குறிலை அடுத்துவந்த லகர ளகரங்களுக்குப் பின் தகரம் வந்தால் அல்வழிப்புணர்ச்சியில் றகர டகரங்களாகவும், ஆய்தமாகவும் திரியும்.

கல் + தீது = கற்றீது, கஃறீது

முள் + தீது = முட்டீது, முஃடீது

ந. சூ.—குறில்வழி ல, ள த அணையின் ஆய்தம்
ஆகவும் பெறூஉம் அல்வழி யானே. (கரு)

## ரு. வருமொழி முதலில் தகர நகரங்கள்

66. நிலைமொழி ஈற்றில் னவ்வும், லவ்வும் இருக்க வருமொழி முதலில் தகரம் வந்தால் அது றகரமாக மாறும்.

பொன் + தீது = பொன்றீது

கல் + தீது = கற்றீது

67. நிலைமொழி ஈற்றில் னவ்வும் லவ்வும் இருக்க வருமொழி முதலில் நகரம் வந்தால் அது னகரமாக மாறும்.

பொன் + நன்று = பொன்னன்று

கல் + நன்று = கன்னன்று

68. நிலைமொழி ஈற்றில் ணவ்வும் ளவ்வும் இருக்க வருமொழி முதலில் வரும் தகரம் டகரமாகத் திரியும்.

மண் + தீது = மண்டீது

முள் + தீது = முட்டீது

69. நிலைமொழி ஈற்றில் ணவ்வும் ளவ்வும் இருக்க வருமொழி முதலில் வரும் நகரம் ணகரமாகத் திரியும்.

மண் + நன்று = மண்ணன்று

முள் + நன்று = முண்ணன்று

## கஎ. வேற்றுமை உருபுகள்

70. வேற்றுமை உருபுகள் சொற்களோடு சேரும்போது இன், அன், அ, உ, அத்து, அற்று முதலிய சாரியைகள் தோன்றும். அவை சார்ந்து இயைப்பதால் சாரியை எனப் பெயர்பெற்றன.

வீடு + இன் + ஐ = வீட்டினை—இன்

இது + அன் + கு = இதற்கு—அன்

நான் + கு = என் + அ + கு = எனக்கு—அ

எவன் + உ + கு = எவனுக்கு—உ

படம் + அத்து + ஐ = படத்தை—அத்து.

அ + அற்று + ஐ = அவற்றை—அற்று.

பயிற்சி கச.

பின் வருவனவற்றைச் சேர்த்து விதி கூறுக:—


எ + ஆடு ; இ + சேனை ; எ + நாடு ; பூ + கை : கல் + அழகிது; மண் + அருமை; கல் + கொடுமை; என் + குற்றம்; என் + தீது.

செல்+குறிது; பொன்+நகரம்; முள்+நீண்டது; ஊர்+கு; நான்+அது; மோதிரம்+ஐ.

### பயிற்சி கரு.

*பின் வருவனவற்றைப் பிரித்து விதி கூறுக :*

அவ்வரசன், எப்பானை, பூங்குழல், எவ்வரசன், நெல்லழகிது, கண்ணகன்றது, பற்கொடுமை, பற்சிறிது, தன்னகரம், கஃடீது என்னை, மரத்தை.



# இலக்கண அட்டவணை

எழுத்து—உயிர், மெய், ஆய்தம்.

உயிர்—குறில், நெடில், சுட்டு, வினா.

மெய்—வல்லினம், மெல்லினம், இடையினம்.

உயிர்மெய்—குறில், நெடில், வல்லினம், மெல்லினம், இடையினம்.

பதம்—பகுபதம், பகாப்பதம்.

பகுபதம்—பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம்.

காலம்—இறப்பு, நிகழ்வு, எதிர்வு.

புணர்ச்சி—இயல்பு, விகாரம், அல்வழி, வேற்றுமை.

சொல்—பெயர், வினை, இடை, உரி.

பெயர்—இடுகுறி, காரணம், பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில், ஆகுபெயர்.

திணை—உயர்திணை, அஃறிணை.

பால்—ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்.

எண்—ஒருமை, பன்மை.

இடம்—தன்மை, முன்னிலை, படர்க்கை.

வேற்றுமை—முதல், இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, உருபு, மயக்கம்.

வழக்கு—இயல்பு வழக்கு, தகுதி வழக்கு.

இயல்புவழக்கு—இலக்கணமுடையது, இலக்கணப்போலி, மரூஉ.

தகுதி வழக்கு—இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி.

வினை—உடன்பாடு, எதிர்மறை ; தெரிநிலை, குறிப்பு ; செயப்படுபொருள் குன்றாவினை, செயப்படுபொருள் குன்றிய வினை ; செய்வினை, செயப்பாட்டுவினை ; தன்வினை, பிறவினை ; ஏவல், வியங்கோள்.

எச்சம்—வினையெச்சம், பெயரெச்சம்.

சொற்றொடர்—1. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், அடைமொழி.

2. தனி, தொடர், கலப்பு.

தொகைநிலைத் தொடர்—வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை, அன்மொழி.

தொகாநிலைத்தொடர்—வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம், எழுவாய், விளி, வேற்றுமை, இடை, உரி, அடுக்கு.

71291

The Jupiter Press, Madras

7/27

# தமிழ் இலக்கணம்

| | ரூ. | அ. |
|---|---|---|
| இளைஞர் இலக்கண வினாவிடை | 0 | 2½ |
| இயற்றமிழ் இலக்கணம் | 0 | 12 |
| ஐந்திலக்கணம் முதற்பாகம் | 0 | 12 |
| ,, இரண்டாம் பாகம் | 1 | 0 |
| நன்னூல் மூலம் | 0 | 3 |
| தொல்—எழுத்ததிகாரம், நச்சினார்க்கினியம் | 3 | 0 |
| தொல்—சொல்லதிகாரம், சேனாவரையம் | 3 | 8 |

---

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிட்டெட்,
6, பவழக்காரத் தெரு, சென்னை.